பக்கங்கள்: 18

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 25 ஞாயிற்றுக்கிழமை 09.02.2020 கதிர் 95

## இனி இது ரகசியம் அல்ல!

இயன்ற விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அரசுத் தரப்பு முனைப்புடன் இருக்கின்றது. ஆனால் தேர்தல் ஆணையமோ உரிய காலத்தில் – அதாவது வரும் ஓகஸ்டில் – பொதுத் தேர்தலை நடத்துவதுதான்

பக்கம் 02 »

# ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு மரியாதை, நீதி, சமத்துவம் வழங்கவேண்டும்

## பிரதமர் மஹிந்தவிடம் வலியுறுத்தினார் மோடி



புதுடில்லி, பெப். 09

ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய மரியாதையை, நீதியை, சமத்துவத்தை, அமைதியை இலங்கை அரசு வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். தமிழர்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்றும் என நம்புகிறேன்.

–இவ்வாறு நேற்று இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இடித்துரைத்திருக்கிறார் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 3 நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியாவுக்குச் சென்றுள்ளார். நேற்று அவர் இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்த பல்வேறு விடயங்கள் தொடர்பாகக்

பக்கம் 03 »

## பொதுத் தேர்தலில் வென்று எம்.பியானால்

# கூட்டமைப்புடன் நாடாளுமன்றில் இணைந்து செயற்படுவாராம் விக்கி!

## காலத்தின் தேவையும் அதுவே என்கிறார்



யாழ்ப்பாணம், பெப்ரவரி 09

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிட்டினால் அங்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவேன். காலத்தின் தேவையும் அதுவாகத்தான் உள்ளது.

–இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வீ. விக்னேஸ்வரன்.

பக்கம் 03 »

## மருத்துவ நிபுணர் சரவணபவவை கௌரவித்து 'அன்பே சிவம்' விருது



யாழ்ப்பாணம்,பெப்.09

மகப்பேற்று மருத்துவ நிபுணர் நமசிவாயம் சரவணபவவுக்கு, 'அன்பே சிவம்' விருது வழங்கி அகில இலங்கை சைவ மகா சபை அவரை கௌரவித்துள்ளது.

தைப்பூசத் திருநாளை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகாசபையின் 'அன்பே சிவம்' விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன. யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி

பக்கம் 03 »

## விக்கி தலைமையில் உதயமாகும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி!

### இன்று உடன்பாடு கைச்சாத்து

யாழ்ப்பாணம், பெப். 09

வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இடம்பெறும் கட்சிகளுக்கிடையில் இன்று ஞாயிற்றுக்கிழமை புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம்

பக்கம் 03 »

## கஜேந்திரகுமாரை அரவணைப்பதற்கு இப்போதும் தயார் என்கின்றார் விக்கி

யாழ்ப்பாணம்,பெப். 09

கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஏற்றுக் கொள்ள எந்தநேரமும் நாங்கள் தயராகவே இருக்கிறோம். ஆனால் அவர் முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. அதனால் நாங்கள் பிரிந்து நின்று செயற்படவேண்டியிருக்கின்றது என வடக்கு முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் நல்லூரிலுள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது. இதன் பின்னர் நடத்திய ஊடக சந்திப்பின்போது புதிய கூட்டணி தொடர்பாக

பக்கம் 03 »

## பாதுகாப்பு அமைச்சுக்குக் கீழ் தொல்பொருள் திணைக்களம்?



கொழும்பு, பெப். 09

தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவது அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பக்கம் 03 »

## தேர்தலின் பின் புதிய அரசில் நாமலுக்கு முக்கிய அமைச்சு!



கொழும்பு, பெப். 09

பொதுத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் புதிய அரசில் நாடாளுமன்ற உறுப்பினர்நாமல்ராஜபக்ஷவுக்கு முக்கியமான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகிடைக்கும்எனஅவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை அரசால் நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவி ஒன்றை

பக்கம் 03 »

### மோசமான பகிடிவதை விவகாரம்;

## பல்கலை வளாகங்களுக்குள் நுழைய சிரேஷ்ட மாணவர் ஒருவருக்குத் தடை!

யாழ்ப்பாணம், பெப். 09

யாழ்.பல்கலைக்கழககிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்பப் பீடத்தில் மோசமான முறையில் பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகிய சிரேஷ்ட மாணவர் ஒருவருக்கு மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகக் கற்கைநெறிகளில் ஈடுபடவோ, வளாகங்களுக்குள் நுழையவோ முடியாதவாறு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவன் மீதான ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்கு

பக்கம் 03 »

# தமிழ்க் கட்சிகள் பிரிந்து செல்வது தமிழரின் அடையாளம் அழியக் காரணமாக அமையும்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. எச்சரிக்கை

மன்னார்,பெப்.09

தமிழ்க் கட்சிகள் பிரிந்து வெளியேறிச் செல்கின்றமை எதிர்காலத்தில் தமிழர்களுடைய அடையாளம் வன்னியில் அழிவதற்குக் காரணமாக அமையும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தந்தை செல்வநாயகத்தினால் இலங்கைப் பிரதமர்களிடம் தமிழ் மக்களின் சுயாட்சி உரிமை சம்பந்தமாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு அவை கிழித்து எறியப்பட்டன.

அதன் பிற்பாடு தந்தை செல்வநாயகம் அவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தமிழீழக் கொள்கையைப் பிரகடனம் செய்தார். தமிழீழம்தான் தமிழர்களுக்கு ஒரே தீர்வாக அமையும் என்றும் பிரகடனம் செய்தார்.

அதனடிப்படையில் தலைவர் பிரபாகரன் ஆயுதப் போராட்டம் மூலம் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

அந்தப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மௌனித்ததன் பிற்பாடு தமிழர்களின் நிலைமை, தமிழர்களின் தனித்துவம், தமிழர்களின் இன்றைய சூழ்நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

இந்நிலையில் இதற்கு முற்பாடு



2001ஆம் ஆண்டு தமிழர்களின் நலன்சார்ந்த முடிவை எடுப்பதற்கும், தமிழர்களின் அரசியல் உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இருந்தாலும் தற்போது கூட்டமைப்பில் இருந்து வெளியேறிச் சென்ற ஒரு சில கட்சிகள் தாங்கள் தனித்துவமாகத் தேர்தலை சந்திப்பதாக அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்படும் பாதகத்திற்கு அப்பால் தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய பாதகத்தை ஏற்படுத்தும் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பாக வன்னி மாவட்டத்தில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் இருக்கின்றது. அதில் 2004ஆம் ஆண்டு 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழர்களாக இருந்தார்கள். 2010ஆம் ஆண்டு 3 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 2015ஆம் ஆண்டு நான் உட்பட நான்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள்.

# ஜனாதிபதியினதும் பிரதமரினதும் படங்களைப் பயன்படுத்தாதீர்கள்!

## சுதந்திரக் கட்சிக்கு எச்சரிக்கை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களின் புகைப்படங்களை பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் புகைப்படங்களை தமது பிரசாரங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது தலைவரின் புகைப்படத்தைப் பயன்படுத்தித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும். இன்னும் ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுகளில் அணி மாறுவோர், பொதுஜன பெரமுனவின் தலைவர்களது புகைப்படங்களை பயன்படுத்தி அரசியலில் ஈடுபடக் கூடாது எனவும் தாரக பாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# சிறிய கட்சிகளையும் அரவணைக்கும் சு.க.

கொழும்பு, பெப். 09

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சகல சிறிய கட்சிகளையும் அழைத்து எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் விதம் தொடர்பாகக் கலந்துரையாடுவது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர்.

நாளை 10 ஆம் திகதி இந்தக் கூட்டம் நடைபெறும் எனவும் சரியான கூட்டணி அமையாவிட்டால் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும் எனவும் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளார்.

அப்படியான தீர்மானத்தை எடுக்கும் போது, யாராவது கட்சியை விட்டுச் சென்று பொதுஜன பெரமுனவில் இணைக்கின்றனரா என்பது குறித்து கவனத்தில் கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சிறிய கட்சிகளுடன் இணைந்து கூட்டணியை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவிக்குக் கொரோனா தாக்கம் இல்லை

கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவிக்கு, கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை எனப் பரிசோதனை அறிக்கைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன், பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 22 வயது பெண்ணுக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லையென வைத்தியசாலையின் பணிப்பாளர் ரஞ்சித் அமரகோன் தெரிவித்துள்ளார்.

மேற்படி இருவரும் சமீபத்தில் சீனாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உசிதம் என்று அரசுக்குத் தெரிவித்திருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.

அரசின் இப்போதைய திட்டப்படி, தற்போதைய நாடாளுமன்றத்தின் நான்கரை ஆண்டு பதவிக்காலம் அடுத்த மாத முற்பகுதியில் முடிவடைகின்றது. அதற்குப் பின்னர் நாடாளுமன்றத்தை எவ்வேளையிலும் ஜனாதிபதி கலைக்கமுடியும்.

அந்த அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்ததும் – அடுத்த மாத முற்பகுதியில்– நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவும் –

அதன் பிரகாரம் ஏப்ரல் கடைசி வாரத்தில் பொதுத் தேர்தலை நடத்தவும் –

அரசுத்தரப்பில் திட்டமிடப்படுகின்றது.

ஏப்ரல் கடைசியில் தேர்தலை நடத்துவதை தேர்தல் ஆணையம் விரும்பவில்லை எனக் கூறப்படுகின்றது.

ஏப்ரல் கடைசியில் தேர்தலை நடத்தினால் பிரசாரக் காலத்துக்கு இடையில் தமிழ், சிங்களப் புத்தாண்டு வரும். தேர்தல் பிரசாரத்துக்கு அது இடைஞ்சலாக இருக்கும்.

புதுவருடப் பிறப்புக்காக ஊருக்குச் செல்லும் வாக்காளர்கள் அது முடிந்து தமது வேலையிடங்களுக்குத் திரும்புவர். அப்படித் திரும்பிய பின்னர் குறுகிய காலத்தில் மீண்டும் பொதுத் தேர்தல் வாக்களிப்புக்காக தத்தமது ஊர்களுக்கு வாக்காளர்கள் திரும்ப வேண்டியிருக்கும்.

குறுகிய காலத்தில் அப்படி இரண்டாம் தடவை ஊருக்குச் செல்ல வாக்காளர்கள் விரும்பமாட்டார்கள். அதனால் வாக்களிப்பு வீதம் குறையும் வாய்ப்புண்டு.

தேர்தல் பிரசாரங்களுக்கு மத்தியில் வருடப் பிறப்புக் கொண்டாட்டங்கள், அனுஷ்டானங்கள் வருகின்றமையும் தேர்தலைப் பாதிக்கும் என அரசுக்கு தேர்தல் ஆணையம் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகின்றது.

அதனால் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை அது முழுமையாகப் பூர்த்தி செய்யும் வரை – வரும் ஓகஸ்ட் வரை – நீடிப்பதற்கு அனுமதிக்கும்படி ஓர் ஆலோசனையைத் தேர்தல் ஆணையம் அரசுக்கு வழங்கியுள்ளது.

அது மட்டுமல்ல, இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் நடத்தப்படவேண்டிய மாகாணசபைத் தேர்தல்கள் நீண்ட பல வருடங்களாக நடத்தப்படாமல் இழுபடுகின்றன.

ஆகவே நாடாளுமன்றத்தை விரைந்து கலைப்பதை விடுத்து, மாகாணசபைத் தேர்தல்களை மேலும் காலதாமதமின்றி நடத்துவதற்கு வசதியாக, உரிய மாகாண தேர்தல் சட்டங்களை இதே நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற விரைந்து நடவடிக்கை எடுக்கும்படியும் –

அதன் மூலம் நீண்டகாலம் நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களையும் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலுடன் நெருக்கமான ஒரு திகதியில் நடத்துவதற்கு ஆவன செய்யுமாறும் –

தேர்தல் ஆணையம் அரசுக்கும் பரிந்துரைத்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசு என்ன செய்யப் போகின்றது? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் தீர்மானிக்க வேண்டும்.

✦✦✦

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான மாற்று அணிக்கான முக்கால் திட்டம் முழுமையடைந்து விட்டது. இன்று தரப்புகள் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகின்றது.

நேற்றுக் கடைசி நேரம் வரை பிகு பண்ணிக் கொண்டிருந்தார் அனந்தி சசிதரன். இணைந்து வராவிட்டால், வரத் தேவையில்லை என்ற அளவுக்கு மாற்று அணித் தலைவர் விக்னேஸ்வரனிடமிருந்து காட்டமாகப் பதில் போனது.

அவ்வளவுதான். வேறுபேச்சுமூச்சின்றி மாலையில் கூட்டுக்குள் ஒடுங்கினார் அனந்தி அம்மா.

இந்தக் கூட்டு – தமிழ் மக்கள் தேசிய கூட்டணி – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று என்று கூறப்படுகின்றது. எந்த வகையில் மாற்று என்பதுதான் கேள்வி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு தலைப்பட்சமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏகபோகம் அதிகம் என்பதும் மாற்று அணித் தேடலுக்கான பிரதான காரணங்களில் ஒன்று.

அந்த ஏகபோகம் இல்லாமல் இந்த தமிழ் மக்கள் தேசிய கூட்டணியில் பங்காளிக் கட்சிகள் எல்லாவற்றுக்கும் சம அந்தஸ்து உண்டா? தெரியவில்லை.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் அதனை இக் கூட்டின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் தெளிபடுத்துவர் என எதிர்பார்க்கிறோம்.

அப்படி ஏகபோக தலைமைத்துவம், தனித்து முடிவு, தம்பாட்டில் தீர்மானம் என்ற பல்லவி இந்தக் கூட்டிலும் தொடரும் என்றால், அந்தக் கூட்டமைப்பில் இருந்து இந்தக் கூட்டுக்கு வந்த தரப்பு களின் நிலைப்பாடு சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதைதான்.

இன்று கைச்சாதகும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் அமைக்கப்படும் புதிய கூட்டணியை வழி நடத்துவதற்கு பதினொரு பிரதிநிதிகள் குழு இருக்கும் என்று தெரிகின்றது.

கூட்டின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன். ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பெயரே மாற்றப்பட்டு புதிய கூட்டாக வடிவம் எடுக்கின்றது என்பதால் கூட்டின் செயலாளர் பதவி ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளரான சிவசக்தி ஆனந்தனுக்கு வழங்கப்படுகின்றது.

கூட்டின் வழி நடத்தல் குழுவில் பதினொரு பேர் என்று குறிப்பிட்டேன் அல்லவா?

அதன் தலைவர் விக்னேஸ்வரன். ஏனைய பத்து பேரில் ஐவர் விக்னேஸ்வரனின் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்கள். இரண்டு இடங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு. மேலும் இரண்டு இடங்கள் சிவாஜி – சிறிகாந்தா கூட்டின் தமிழ்த் தேசியக் கட்சிக்கு. எஞ்சிய இடம் அனந்தியின் தரப்புக்கு.

ஆக பதினொரு பேர் கொண்ட வழிகாட்டல் குழுவில் விக்னேஸ்வரனுடன் சேர்ந்து ஆறுபேர் அவரின் கட்சியைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய ஐந்து இடங்கள்தான் மற்றைய மூன்று தரப்புகளுக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத்தமிழரசின் கைதான் ஓங்கியிருக்கும் எப்போதும். வழிகாட்டல் குழுவில் அனைத்து அங்கத்துவக் கட்சிகளும் – அல்லது பங்காளிக் கட்சிகளும் இடம்பெற்றாலும் குரலும், தீர்மானமும், முடிவும் எப்போதும் தமிழரசுத் தலைமை பக்கமாக ஓங்கியிருக்கும். எண்ணிக்கை ஏற்பாடு இல்லாத ஒரு மேலாதிக்கம்.

ஆனால் மாற்றுக் கூட்டணியிலோ அது எண்ணிக்கை ஒழுங்கு மூலம் உறுதிப்படுத்தப்பட்டும் இருக்கிறது.

அப்படியானால் இது எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றுக் கூட்டாகும்?

இரண்டுமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்பதுதான் என் கணிப்பு.

அப்படி அல்ல, அவை வேறுபட்டவை என்று அவற்றின் செயல்பாட்டில் எனக்குத் தோன்றுமானால் – அப்போது அதனை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வேன்.

மின்னல்...

# மற்றொரு புதிய கூட்டணியை அமைக்கும் முன்முயற்சியாக ஐந்து முன்னாள் மாகாண ஆளுநர்கள் கொழும்பில் பேச்சு!



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மற்றொரு புதிய கூட்டணியை அமைக்கும் முயற்சிகள் தற்போது கொழும்பில் இடம்பெற்று வருகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக இரண்டு பிரதான கட்சிகளுடனும் கூட்டு சேராத –மிதவாதகொள்கைகளையுடைய –சிறிய அரசியல் கட்சிகள் மற்றும் தரப்பினரை இணைத்துக் கொண்டு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் தெரியவருகின்றது.

இதன் ஒரு கட்டமாக மேல் மாகாண முன்னாள் ஆளுநரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலியின் கொழும்பு இல்லத்தில், முன்னாள் ஆளுநர்களின் பங்களிப்புடன் முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஆளுநர்களான 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், முன்னாள் ஊவா மாகாண ஆளுநருமான கீர்த்தி தென்னக்கோன், ஜனாதிபதி சட்டத்தரணியும், மத்திய மாகாண முன்னாள் ஆளுநருமானமைத்ரி குணரத்ன, சப்ரகமுவ மாகாண முன்னாள் ஆளுநரான தம்ம திசாநாயக்க மற்றும் வட மாகாண முன்னாள் ஆளுநரான கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். அண்மைக் காலமாக சிறிலங்கா சுதந்திர கட்சி சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் கரைந்து போனதும், ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவச் சிக்கலை மற்றும் ஸ்திரமின்மை ஆகிய காரணங்களால் சிறுபான்மை மக்கள் அந்த பிரதான கட்சிகள் மீது வைத்திருந்த நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் குறைந்து வருவதையிட்டு ஆளுநர்கள் ஐவரும் கரிசனை வெளியிட்டுள்ளனர்.

அரசியல் கறைபடியாதவர்களையும், புத்திஜீவிகளையும், மிதவாத நிலைப்பாட்டுடையவர்களையும் இணைத்துக் கொண்டு ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான தேவையின் நிமித்தம் புதிய கூட்டணிக்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பான பேச்சுக்களில் எவ்வித இறுதி முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்பதுடன், மற்றுமொரு சந்திப்புக்கான இணக்கத்துடன் முன்னாள் ஆளுநர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

எவ்வாறாயினும், தேசிய அரசியல் நீரோட்டத்தில் தொடர்ந்தும் மக்களின் அபிலாசைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் நோக்கத்துடன் நீடித்த அரசியல் பயணமொன்றை முன்னெடுப்பதன் தேவையை புதிய கூட்டணி பூர்த்தி செய்யுமா என்பது கேள்விக்குறியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## திகனவில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்து நான்கு இளைஞர்கள் சாவு



திகன, மெனிக்ஹின்ன பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நான்கு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கொங்கிரீட் குவியல் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 1.35 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ள நிலையில், விபத்தில் படுகாயமடைந்த இளைஞர்கள் மெனிக்ஹின்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை, உஹன மற்றும் மகியங்கனை பிரதேசங்களை சேர்ந்த 17 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மெனிக்ஹின்ன பொலிஸார் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கிலுள்ள தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு இதுவே சிறந்த வழி என்றும் அவர் அவர் குறிப்பிட்டார்.

பலப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்துரைத்த அவர் –

தொல்லியல் பாதுகாப்புச் செயற்பாடுகளை உயர் ஒழுக்க விதிமுறைகளின் கீழ் முன்னெடுக்கவேண்டியது அவசியம். அதனால் அவற்றின் மீது முழுமையாக அதிகாரத்தைச் செலுத்திப் பாதுகாக்கவேண்டியது அவசியம்.

இந்த நிலையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள தொல்லியல் சின்னங்களைப் பாதுகாப்பதே கடினமாக உள்ளது. வடக்கு-கிழக்கிலேயே அதிகளவான தொல்லியல் சின்னங்கள் இருக்கின்றன.

வடக்கு-கிழக்கில், இன மத மோதல்கள் ஏற்படும் பட்சத்தில் தொல்லியல் சின்னங்கள் சிதைவடையலாம். அவற்றைப் பாதுகாத்தால் மாத்திரமே எதிர்காலச் சந்ததிக்கு வரலாறு தொடர்பாகத் தெரிவை வழங்க முடியும்-என்றார். (ஐ)

### பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதுவாகவும் விசாரணைகளில் தலையீடுகளைத் தவிர்ப்பதற்காகவும் பல்கலைக்கழக எல்லைக்குள் நுழைவதற்கான (Out of Bounds) இடைக்காலத் தடை விதிக்கப்படுவதாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்பப் பீடத்தின் முதுநிலை மாணவர்கள் சிலர் புதுமுக மாணவிகள் சிலர் மீது மோசமான பகிடிவதையில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தமையை அடுத்து ஒழுக்காற்றுக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்துக்கு நேற்று முன் தினம் சென்றிருந்த குழு அங்குள்ள அதிகாரிகள், மாணவர்கள் சிலரிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

எனினும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தரப்பிடமோ, குற்றஞ்சாட்டப்படும் தரப்பிடமோ விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அறிய முடிகிறது. (ஐ-07)

### மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் அகில இலங்கை சைவ மகா சபையின் தலைவர் சிவத்திரு ந.சண்முகரத்தினம் தலைமையில் இந்த விழா இடம்பெற்றது.

அகில இலங்கை சைவ மகாசபையின் அன்பே சிவம் விருது மகப்பேறு மருத்துவ நிபுணர் நமசிவாயம் சரவணபவ வுக்கு வழங்கப்பட்டது. அவரது மருத்துவ சேவையைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டது.

தொடர்ந்து அன்பே சிவம் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராசா , கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் சி.குணசீலன், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.தேவநேசன், உள்ளிட்டவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

### ஒன்றுபட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு நாடுகளின் பாதுகாப்பு, நட்புறவு, வர்த்தகம், கடல்சார் பாதுகாப்பு, தீவிரவாத ஒழிப்பு, இரு தரப்பு மீனவர்கள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாகப் பேசியுள்ளனர்.

அதன் பின்னர் பிரதமர் மோடி ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் –

இலங்கையின் அரசின் நிலைத்தன்மை, பாதுகாப்பு, வளர்ச்சி ஆகிய நலன்களின் மீது இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் நலன்களையும் இந்தியா கருத்தில் கொண்டுள்ளது.

இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நட்புறவு நாடாக இலங்கை இருந்து வருகிறது. இலங்கையின் அமைதிக்கும், மேம்பாட்டுக்கும் தொடர்ந்து இந்தியா துணை செய்யும்.

ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய மரியாதையை, நீதியை, சமத்துவத்தை, அமைதியை இலங்கை அரசு வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். தமிழர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என நம்புகிறேன். இதேவேளை, இரு தரப்பு மீனவர்கள் விவகாரத்தைப் பொறுத்தவரை மனிதநேயத்துடன் இந்த விடயத்தை நாம் அணுக வேண்டும்.

தீவிரவாதத்தை ஒழிக்கும் விடயத்தில் இரு நாடுகளும் கூட்டாக இருந்து செயற்பட முடிவு செய்துள்ளோம். தீவிரவாதம் மிகப்பெரிய பிரச்சினையாக இரு நாடுகளுக்கும் இருக்கிறது. இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டுத் தீவிரவாதத்துக்குப் பதிலடி கொடுப்போம். தீவிரவாதத்தைத் தடுக்கும் முயற்சியில் இருநாடுகளும் இன்னும் கூட்டுறவோடு செயற்படுவோம்- என்றார். (ஐ)

### தேர்தலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டதுடன் அவர் அதனை நிராகரித்தார் என ராஜாங்க அமைச்சர் ஒருவர் அண்மையில் கூறியிருந்தார்.

நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆரம்ப கால உறுப்பினர் என்பதுடன் அவர் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமாவார். (ஐ)

### கூட்டமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டான் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

இந்த நேர்காணலில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றால் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவீர்களா? என்று விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்துள்ள அவர்,

நிச்சயமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றித்து நிற்பதே சிறந்தது. காலத்தின் தேவையும் அதுவாகத்தான் உள்ளது. இதனால் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவேன்- என்றார். (ஐ)

### கஜேந்திரகுமாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- புதிய தோர் கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் தற்போது நான்கு கட்சிகளுக்கிடையே உடன்பாடுகள் எட்டப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. இதில் எங்கள் கட்சியுடன் ரெலோ? ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம், தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன இணைந்து கொள்கின்ற அதே நேரத்தில் கஜேந்திரகுமாரின் கட்சி இணைந்து கொள்ளவில்லை.

ஆனால் கஜேந்திரகுமாரின் கட்சியை ஏற்றுக் கொள்வதற்கு எந்தநேரமும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அவர்தான் எங்களுடன் வராமல் எங்களை விட்டுவிட்டுச் செல்கின்றார். ஏனெனில் அவரை விடுங்கள் நாங்கள் வருகின்றோம் என்று கூறுகின்றார்.

அதாவது சுரேஷ் பிரேமச்சந்திரனின் கட்சியை இணைக்கா விட்டால் தாங்கள் வருவார்கள் எனக் கூறுகின்றார். ஆனால் அவரது அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

உண்மையில் நாங்கள் மூவரும் தமிழ் மக்கள் பேரவையில் ஒன்றாகவே பயணித்துக்கொண்டிருந்தோம். அதன் போதெல்லாம் சுரேஷ் அண்ணா, சுரேஷ் அண்ணா என்று எத்தனையோ தடவைகள் எல்லாம் கஜேந்திரகுமார் அழைப்பதையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன்.

ஆனால் அவர்களுக்கிடையே ஏதோ ஒருசில விடயங்களில் மனக் கசப்பு ஏற்பட்டதன் நிமித்தம் தற்போது அவரை வெளியேற்றுங்கள் நாங்கள் வருகின்றோம் என்று கஜேந்திரகுமார் தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் அவர்களது அந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

அந்த ஒரு காரணத்தினால் நாங்கள் மூவரும் இணைந்து பயணிக்க முடியாமல் பிரிந்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எது,எவ்வாறு இருப்பினும் கஜேந்திரகுமார் எம்மோடு வந்தால் நாங்கள் அவரை இணைத்துக் கொண்டு பயணிக்கத் தயாராகவே இருக்கிறோம். ஆனாலும் அவர் வரமாட்டார் என்றுதான் நினைக்கின்றேன்-என்றார். (ஐ-07)

### விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் கைச்சாத்திடவுள்ளன எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நான்கு கட்சிகளும் இணைந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் கைச்சாத்திடும் உத்தியோக பூர்வ நிகழ்வு இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சின்னம் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றனர் எனவும், இது வரை எதுவித முடிவுகளும் எட்டப்படவில்லை எனவும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பாலுக்குக் காவல் பூனையாம்!

'பாலுக்குக் காவல் பூனையா?' என்றொரு கேள்வி நம் மத்தியில் அடிக்கடி கேட்கப்படுவதுண்டு.

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய தமது அரசில் உயர் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும் போது இப்படி ஒரு கேள்வி பல தரப்பினராலும் அவ்வப்போது கேட்கப்பட்டே வருகின்றது.

அந்த வகையில் ஜெனிவாவுக்கான இலங்கையின் சிறப்புப் பிரதிநிதியாக – விசேட தூதுவராக – நாட்டின் சார்பிலான முக்கிய இராஜதந்திரியாக – நியமிக்கப்பட்டிருக்கும் சி.ஏ.சந்திரப்பிரேம குறித்து இப்படித்தான் கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

இந்தக் கேள்வி உள்நாட்டில் இருந்து மட்டும் எழவில்லை. சர்வதேச சமூகத்திடமிருந்தும் எழுந்திருக்கின்றமையும் முக்கியமானதாகும்.

சுவிஸில் ஜெனிவாவை மையமாகக் கொண்டு இயங்கும் தூதரகங்கள் அங்கு செயற்படும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் உட்பட்ட ஐ.நா அமைப்புகளோடு நெருங்கி, ஊடாடிப் பழக வேண்டிய கடப்பாடு கொண்டவை.

அங்குள்ள தூதரகத்துக்குத் தலைமைப் பொறுப்பில் செல்பவர் நிச்சயமாக ஐ.நாவின் இராஜதந்திர தரத்தை பேணக் கூடிய தகுதி நிலையில் இருக்க வேண்டும் என்பது மிகமிக அத்தியாவசியமானதாகும்.

முக்கியமாக மனித உரிமைகள் விடயத்தில் மிகத் தெளிவான கடந்த காலப் பதிவுகளை கொண்டவராக அவர் இருக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

இத்தகைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர் குறித்து கொழும்பும், இலங்கையும், அதன் மக்களும் கவனிக்காமல், அசிரத்தையாக இருப்பர் என்றால், அதற்காக சர்வதேச சமூகமும் அப்படி நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கக் கூடாது ; எதிர்பார்க்க முடியாது.

அதுவும், இலங்கை போன்ற மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மிக மோசமான கடந்த காலப் பதிவுகளைக் கொண்ட நாடு குறித்த விடயத்தில் சர்வதேச சமூகமும் உலக இராஜதந்திர வட்டாரங்களும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு பார்த்திருக்கும் என்று சர்வதேச அரசியலில் அரிச்சுவடி படித்தவருக்குக் கூடத் தெரியும்.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் கடந்த காலத்தில் மிக மோசமான பதிவுகளைக் கொண்டிருப்போர் விவகாரத்தில் அத்தகையோரை – மருத்துவச் சிகிச்சைக்குத் தன்னும் – தனது நாட்டுக்குள் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் எடுப்பதேயில்லை.

அப்படியிருக்கையில் ஜெனிவாவுக்கான இலங்கையின் தூதுவரைத் தெரிவு செய்யும் விடயத்தில் இலங்கையினதும் அதன் அரசினதும் தெரிவு சந்தி சிரிக்கும் விவகாரமாக மாறியிருக்கின்றது.

ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில், அதனுடன் இணைந்து செயற்பட்ட புரட்சி அமைப்பின் இளைஞர்களை சட்ட முறையற்ற விதத்தில் கொன்றொழிக்கும் பணியை இராணுவத்தின் வலது கரமாகச் செயற்பட்ட *'புரட்சிகர மக்கள் செஞ்சேனை'* என்ற ஒளிவுமறைவு இயக்கம் முன்னெடுத்தது.

அந்த மறைவு இயக்கத்தில் ஒரு சூத்திரதாரியாகச் செயற்பட்டு, மனித உரிமை ஆர்வலர்கள், மனித உரிமைகள் சட்டத்தரணிகளாகக் கடமை புரிந்த பலரை அச்சுறுத்தி, மிரட்டி, கொன்றொழித்து 'சாதனைகள் புரிந்த' ஒருவரை இப்போது ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதராக நியமித்து நகைப்புக்கு இடமாகியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அவர், ஜெனிவாத் தூதுவராக நியமித்த சி.ஏ. சந்திரபிரேமவின் கடந்த காலம் குறித்து சர்வதேச தரப்புகளிடமிருந்து ஏளனமான பிரதிபலிப்புகள் காட்டப்படுகின்றன.

உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா அம்மையார் இலங்கையில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் குறித்தெல்லாம் நன்கறிந்தவர்.

ஐ.நா. சார்பில் அவை குறித்தெல்லாம் நேரடியாக விசாரணை நடத்தி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு சமர்பித்தவர். தருஸ்மன் குழுவின் அறிக்கையில் அவரது (ஜஸ்மின் சுகாவின்) பங்களிப்பு அளப்பரியது.

அவரே மேற்படி ஜெனீவாவுக்கான இலங்கையின் சிறப்புத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் சந்திரப்பெருமவின் கடந்த காலம் பற்றிய விடயங்களைப் புட்டுப் புட்டு வைத்திருக்கின்றார்.

யுத்தக் குற்றங்களோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்ட ஜெனரல் சவேந்திர சில்வாவை ஐ.நா. பொதுமன்றம் செயற்படும் நியூயோர்க்கிற்கே துணைத் தூதராக அனுப்பி அழகு பார்த்தது இலங்கை.

அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பவே அவரை அந்தச் பொறுப்பில் இருந்து விலக்கி, மீண்டும் இராணுவ சேவைக்குள் அவரைக் கொண்டு வந்து, இராணுவத் தளபதி பட்டமும் அளித்தது இதற்கு முந்திய மைத்திரி அரசு.

இப்போது ஜெனிவாத் தூதராக நியமிக்கட்டிருக்கும் சந்திரப்பிரேமா குறித்தும் அவரது மனித உரிமை மீறல் போக்குக் குறித்தும் சர்வதேச மட்டத்திலும் உள்ளூரிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

என்ன செய்யப் போகின்றது கொழும்பு? பாலுக்குத் தொடர்ந்து பூனையைத்தான் காவலுக்கு வைக்கப் போகின்றதா?

# சிறுபான்மையினரின் ஆதரவு இல்லாமல் பேரினவாதிகள் ஆட்சியமைக்க முடியாது

## அடித்துச் சொல்கிறார் ரிஷாத் பதியுதீன்



கொழும்பு, பெப். 09

பேரினவாதச் சிந்தனை கொண்டவர்கள் என்னதான் செய்தாலும் சிறுபான்மையினரின் ஆதரவின்றி ஒருபோதும் ஆட்சியமைக்க முடியாதென முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார், முசலி, புதுவெளியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

சிறுபான்மைக் கட்சிகளின் துணையின்றி நாம் ஆட்சியமைப்போம் என வீறாப்புப் பேசிக் கொண்டிருக்கும் சில அரசியல்வாதிகள், பொதுத் தேர்தலின் பின்னர் தமது அறியாமையை அறிந்துகொள்வர்.

அவர்களின் உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் இனவாத மற்றும் மதவாத சிந்தனைகளின் வெளிப்பாடாகவே இந்த ஆசையை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், ஒருபோதும் இது நிறைவேறாது.

ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை மக்களை உசுப்பேற்றி வாக்குகளைப் பெற்றதைப் போன்று, இந்தத் தேர்தலில் அவர்கள் நினைத்த மாத்திரம் வாக்குகளைப் பெறமுடியாது.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள், தமது இருப்புக்காக நடத்தும் போராட்டங்களை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். ஆண்டாண்டு காலமாக அங்கு வாழ்ந்துவரும் முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியில் பலமிழந்ததனாலேயே இன்று நசுக்கப்படுகின்றனர்.

அதேபோன்ற பாணியிலேயே தற்போது இங்கும் சதிகள் அரங்கேறி வருகின்றன. நமது சமூகம் அனுபவிக்கும் விசேட உரிமைகள் மற்றும் சலுகைகளை, புதிய சட்டங்களைக் கொண்டு வந்து நசுக்குவதற்கான பிரேரணைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இரண்டு மாத காலத்தில் இந்த இடைக்கால – சிறுபான்மை அரசாங்கத்தில், சிறுபான்மைச் சமூகத்துக்கு நடந்தேறிவரும் சம்பவங்கள் நமக்கு எதிர்காலத்தை வெளிச்சம் போட்டுக்காட்டத் தொடங்கியுள்ளது. பொதுத்தேர்தலின் பின்னர், இவர்கள் தனியே நின்று ஆட்சியமைத்துக் கொண்டால் நிலைமை என்னவாகும்? – என்றார். (ஐ)

# 48 சாரதிகள் சிக்கினர்





வவுனியா, பெப். 09

வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரின் விசேட நடவடிக்கையால் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் ஓட்டிய பல சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் வீதி பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை இரு மணித்தியாலங்கள் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியாவில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள விபத்துக்களைக் கருத்திற்கொண்டு வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்த விசேட நடவடிக்கையால் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் ஓட்டிய 44 சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், 4 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கையில், தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் ஓட்டியமை, குடிபோதையில் வாகனம் ஓட்டியமை, வாகனம் ஓட்டும் போது தொலைபேசி பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காகச் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாலியல் குற்றங்கள்: முன்னணியில் மட்டு.

கொழும்பு, பெப். 09

2020ஆம் ஆண்டின், முதல் 15 நாள்களில் இலங்கையில் 142 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள், 42 கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்கள், 54 சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பன பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அரசின் பிரதம கொரடா ஜோன்ஸ்டன் பெர் ணான்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் அதிகமான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்திலேயே நிகழ்ந்துள்ளன. 44 பாலியல் வன்புணர்வுகள், கடுமையான பாலியல் குற்றம் 8 மற்றும் 17 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை 2012 முதல் 2020 வரையான பகுதியில் 11,998 பாலியல் வன்புணர்வுகள், கடுமையான பாலியல் குற்றங்கள் 4,806 மற்றும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் 5,891 என்பன பதிவாகியுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டார்.

## நாளை

10.02.2020 – திங்கட்கிழமை

நட்சத்திரம்: மகம் மரணம் மு.இ. 07.27 வரை
திதி : பிரரதமை மு.ப. 11.48 வரை
இராகுகாலம் : 08.04 – 09.34
சுப நேரம் : 12.34 – 02.04

# முல்லையில் நேற்று வெடிப்புச் சம்பவம்!

## இரும்பு வியாபாரி படுகாயம்





முல்லைத்தீவு, பெப். 09

முல்லைத்தீவு, சிலாவத்தை மாதிரிக் கிராமத்தில் இடம்பெற்ற வெடிப்புச்சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த வெடிப்புச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற நிலையில் படுகாயமடைந்தவர் ஒரு காலை முற்றாக இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இரும்புவியாபாரம் செய்யும் சூசைப்பிள்ளை புலேந்திரன் (வயது-42) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் இரும்பு வியாபாரம் செய்பவர் எனவும் இதற்காகச் சேகரிக்கப்பட்ட பொருள்களைஅவர் பிரித்தெடுக்க முயற்சித்தபோதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையுடன் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபையின் உபதலைவராக அமரசிங்கம் கேதீஸ்வரன்

கொழும்பு, பெப். 09

இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபையின் உபதலைவராக அமரசிங்கம் கேதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி வரும் இவர் கடந்த 05 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபையின் நிர்வாக தெரிவின்போதே உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

153 பொதுச் சபைப் பேராளர்கள் கலந்துகொண்டு வாக்களிக்கும் இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபையின் தலைவராக குளியாப்பிட்டி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் சரத் வீர சிறி வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டமையோடு, உப தலைவராக கேதீஸ்வரன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போன்றவற்றில் தலைவராக இருந்து கேதீஸ்வரன் மாகாண மட்டப் பிரதிநிதியாக தேசிய கூட்டுறவுச் சபைக்குத் தெரிவு செய்யபட்டவர்.

இலங்கையின் கூட்டுறவு அமைப்புகளின் ஒரேயொரு தலைமை அமைப்பாக இச்சபை காணப்படுகிறது. அத்தோடு ஆசிய பசுபிக் பிராந்திய கூட்டுறவுச் சபையிலும் இவ்வமைப்புக்கு அங்கத்துவம் உண்டு. (ஐ)

## ஜெய்சங்கரை நேற்று சந்தித்தார் மஹிந்த!



புதுடில்லி, பெப். 09

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் சி.ஜெய்சங்கரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக இந்தியா வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து நாள்கள் விஜயமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு புதுடில்லி விமான நிலையத்தில், மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்தும் வகையில் பிரதமரின் இந்த விஜயம் அமைவதாகப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்டவர்களும் பங்கேற்றுள்ளனர். (ஐ)

## அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, பெப். 09

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிற்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.



அதற்கமைய அவரை எதிர்வரும் 10ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவே அவர் அழைக் கப்பட்டுள்ளார்.

அதேபோல் கடற்படை கொமாண்டர் ஆர்.பி.எஸ்.ரணசிங்க மற்றும் லெப்டினன்ட் கொமாண்டர் எச்.எம்.பி.சி ஹெட்டியாராச்சி ஆகியோரும் அன்றைய தினம் பிற்பகல் 1 மணிக்கு ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.09

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**வவுனியா பிரதேசத்தில்-**

புதுக்குளம் கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், இலுப்பைக்குளம், மதவுவைத்தகுளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

## கொரோனா வைரஸ் பாதிப்பு :

# மாநிலப் பேரிடர் அறிவிப்பை விலக்கிக் கொண்டது கேரளா

திருவனந்தபுரம்,பெப்.09

கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக கேரளாவில் அறிவிக்கப்பட்ட மாநிலப் பேரிடர் தளர்த்தப்பட்டுள்ளது.

சீனா முழுவதும் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வருகிறது. இந்த நிலையில், சீனாவில் இருந்து கேரளா திரும்பிய 3 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது தெரியவந்தது. ஒட்டு மொத்தமாக இந்தியாவில் உறுதி செய்யப்பட்ட 3 கொரோனா வைரஸ்பாதிப்பும் இவைமட்டுமே. இதையடுத்து, கடந்த திங்கள் கிழமையன்றுகொரோனாவைரஸ் பாதிப்பை மாநில பேரிடராக அம் மாநில முதல் மந்திரி பினராயி விஜயன் அறிவித்தார்.




இந்த நிலையில், கேரளாவில் கடந்த சில நாள்களில் யாருக்கும் புதிதாக கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாததால், திங்கட்கிழமை அறிவிக்கப்பட்ட மாநில பேரிடரை தளர்த்துவதாக அரசு அறிவித்துள்ளது

இதுதொடர்பாக கேரளா சுகாதாரத்துறை அமைச்சர் லைஜா கூறும்போது, பரிசோதனை முடிவுகள் நிலைமை மேம்பட்டுள் ளமையைக் காட்டுகின்றன, இருப்பினும் நாங்கள் தொடர்ந்து கண்காணிப்போம். கொரோனாவை தடுப்பதற்கான எச்சரிக்கை வழிமுறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப் படும். சீனாவில் இருந்து வந்தவர்கள் தொடர்ந்து தங்கள் உடல் நிலை குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்என்றார்.

# நீதிபதியின் மனைவி மற்றும் மகனை சுட்டுக்கொன்ற காவலருக்குத் தூக்கு

## அரியான நீதிமன்றம் தீர்ப்பு



அரியானா மாநிலத்தில் நீதிபதியின் மனைவி மற்றும் மகனை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றமை தொடர்பான வழக்கில் முன்னாள் பாதுகாவலருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குருகிராமில் உள்ள ஆர்காடியா சந்தை அருகே 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கூடுதல் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணகாந்த் சர்மாவின் மனைவி ரீது, மகன்துருவ் ஆகியோரை பாதுகாவலர் மகிபால்சுட்டுக் கொன்றார்.

இதுதொடர்பாக குருகிராமில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் 2 ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

அதில்மகிபாலுக்குத்தூக்குத் தண்டனை விதித்து உத்தர விடப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அந்நீதிமன்றம் விதித்துள்ள முதல் தூக்குத் தண்டனை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாசாவின் அழைப்பை ஏற்க மறுத்த பீகார் மாணவர்

பாட்னா,பெப்.09

பீகாரை சேர்ந்த ஆராய்ச்சி மாணவருக்கு நாசா அழைப்பு விடுத்தது. ஆனால் அதனை ஏற்கமறுத்த அவர், இந்தியாவுக்காகப் பணிபுரிய விரும்புகிறார் எனக் கூறினார்.

பீகார் மாநிலம் பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் கோபால்ஜி (வயது 19). இவரது தந்தை பிரேம் ரஞ்சன் குன்வார் விவசாயி. ஏழை குடும்பத்தில் பிறந்த கோபாலுக்கு ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அரசு பள்ளியில் படித்த அவர் புதிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

கோபால்ஜி 2017 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தனது முயற்சி பற்றி கூறினார். இதைத்தொடர்ந்து அவர் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைக்கும், பின்னர் ஆமதாபாத்தில் உள்ள தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளைக்கும் (என்.ஐ.எவ்) அனுப்பப்பட்டார். இங்கு கோபால்ஜி 4 புதிய கண்டுபிடிப்புகளை செய்து காட்டினார்.

அவர் வாழை இலை கழிவில் இருந்து வாழை உயிர் செல், காகித உயிர் செல், அதிக வெப்பத்தை தாங்கக்கூடிய கோபோனியம் அலாய் ஆகியவற்றை உருவாக்கி இருந்தார். தனது 10ஆம் வகுப்பின்போது 'இன்ஸ்பயர்' விருதையும் பெற்றார். இதைத்தொடர்ந்து அவருக்கு வெளிநாடுகளில் இருந்து அழைப்புகள் வரத்தொடங்கின.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, கோபால்ஜிக்கு அழைப்பு விடுத்தது. துபாய், ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவையும் அழைப்பு விடுத்தன. இதையெல்லாம் அவர் கண்டு கொள்ளாமல், 'இந்தியாவுக்கு ஏதாவது செய்ய வேண்டும்' என்ற குறிக்கோளுடன் இருந்தார்.

இதுபற்றி கோபால்ஜி நிருபர்களிடம் கூறியவை வருமாறு: –



எனது முயற்சிகளுக்கு என்னுடைய தந்தை உதவியாக இருந்தார். வாழை இலை கண்டுபிடிப்புக்கு பிறகு, வெளிநாடுகளில் இருந்து அழைப்புகள் வரத்தொடங்கின. கோபோனியம் அலாய் கண்டுபிடிப்புக்குநாசா அழைப்புவிடுத்தது, ஆனால் அதனை நிராகரித்துவிட்டேன். அமெரிக்க விஞ்ஞானிகளும் என்னை சந்திக்க வந்தார்கள். இந்தியாவுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எனது விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தேன்.

இந்திய அறிவியல் மற்றும் புதுமைகளுக்காக 12 ஆம் வகுப்புக்கு கீழ் உள்ள மாணவர்களை ஊக்குவிக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறேன். பள்ளி மாணவர்களிடையே அறிவியல் மன நிலையை வளர்ப்பதே எனது முக்கிய திட்டம். தற்போது டேராடூனில் உள்ள கிராபிக் எரா பல்கலைக்கழகத்தில் பி.டெக் படிப்பில் சேர்ந்து ஆராய்ச்சி படிப்பு மேற்கொண்டு வருகிறேன். எனது முக்கிய நோக்கம் 100 ஆராய்ச்சி மாணவர்களை கண்டுபிடிப்பது ஆகும். நாடு முழுவதும் ஒரு குழுவாக இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். – இவ்வாறு அவர் கூறினார்.

கோபால்ஜி ஏற்கனவே வாழை மற்றும் காகித உயிர் கலங்களுக்கு காப்புரிமைகளை பெற்றுள்ளார். நீர் மின் உயிர் செல், கோபா அலாஸ்கா, போலி பிளாஸ்டிக், லிச்சி ஒயின் போன்ற மற்ற சோதனைகளில் ஈடுபட்டு வருகிறார்.

# பெண் எஸ்.ஐ.யை சுட்டு கொன்ற ஆண் எஸ்.ஐ. தானும் தற்கொலை

## டெல்லியில் நடந்த கொடூரம்



டெல்லியில் பெண் சப் இன்ஸ்பெக்டரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் ஆண் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர்.

டெல்லி ரோஹினி காவல்நிலைய பெண் சப் இன்ஸ்பெக்டரான ப்ரீத்தி நேற்று முன்தினம் இரவு பணி முடிந்து, மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து இறங்கி வீட்டுக்கு நடந்து சென்றபோது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரை இன்னொரு சப் இன்ஸ்பெக்டரான தீபான்ஸ் கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், ஹரியானா மாநிலம் கர்னால் அருகே காரில் தீபான்ஸ் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து சடலமாகக் கிடக்கின்றமையைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து இருவரின் சடலங்களையும் கைப்பற்றிய டெல்லி பொலிஸார் கொலை மற்றும் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொரோனாத் தொற்றுத் தடுப்பில் சென்னையில் ஒரே குளறுபடியாம்!

சென்னை,பெப்.09

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டு சீனர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு பேருக்கும் கொரோனா வைரஸ் தாக்கியிருக்கலாம் என டாக்டர்கள் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், இரண்டு இளைஞர்களுக்கும் சிகிச்சை அளிக்க சென்ற போது, மருத்துவமனை அதிகாரிகள் தங்களுக்கு, நோய் தாக்குதலில் இருந்து தடுக்கும் உபகரணங்களை வழங்கவில்லை என சம்பந்தப்பட்ட டாக்டர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாகத் தங்களது துறைத்தலைவருக்கு அந்த டாக்டர்கள் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு: –

பிப்.,5 2020 முதல், கொரோனா வைரஸ் தாக்குதல் என்ற சந்தேகத்தில் 4 பேர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது தெரியும். அதில், இரண்டு பேர் முதல் தளத்திலும் மற்ற இரண்டு பேர் 6 ஆவது தளத்திலும் சிகிச்சை பெறுகின்றனர். இங்கு, நோயாளிகள் மற்றும் பொது மக்கள் நடமாட்டம் அதிகம் இருப்பது தெரியும். 48 மணி நேரம் தாண்டியும், உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் விதிகளின்படி, அவர்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. அந்த பகுதியில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவில்லை. இது, சுகாதார ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களுக்கு அச்சுறுத்தல் ஆகும். உலக சுகாதார அமைப்பின் விதிகளைப் பின்பற்றுவதுடன், மருத்துவமனையில் உள்ள ஊழியர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். – இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் பரவுவதற்கு எறும்பு திண்ணிகளே காரணமாம்



பெய்ஜிங்,பெப்.09

எறும்பு திண்ணிகளே கொரோனா வைரஸ் பரவுவதற்கு காரணமாக இருக்கலாம் என சீன விஞ்ஞானிகள் ஆய்வில் கண்டறிந்து உள்ளனர்.

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு 722 பேர் பலியாகி உள்ளனர். 34,546 பேர் வைரஸால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் சீன விஞ்ஞானிகள் ஒரு குறிப்பிட்ட வகை எறும்பு திண்ணிகள் கொரோனா வைரஸ் பரவுவதற்கு காரணமாக இருக்கலாம் என்று கண்டறிந்துள்ளனர்.

தென் சீன வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழுவின் ஆய்வின்படி, ஆபத்தான பாலூட்டிகளிலிருந்து பிரிக்கப்பட்ட மரபணு வரிசை வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 99 சதவீதம் ஒத்து இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

காட்டு விலங்குகளின் 1,000 மெட்டஜெனோம் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன, மேலும் எறும்பு திண்ணிகள் பெரும்பாலும் வைரசைப் பரப்பி இருக்கலாம் என்று கண்டறியப்பட்டது.

சீனாவிலும் வியட்நாமிலும் மனித நுகர்வு மற்றும் மருத்துவ மதிப்புக்காக ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கில் இது வேட்டையாடப்படுவதால், எறும்பு திண்ணிகள் அதிகம் கடத்தப்படும் விலங்குகள் ஆகும்.

பல்கலைக்கழகத்தின் தலைவரான லியு யாகோங், இந்த ஆய்வு தொற்றுநோயைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் துணைபுரிகிறது, அத்துடன் காட்டு விலங்குகள் குறித்த கொள்கைகளுக்கு அறிவியல் குறிப்பையும் வழங்குகிறது என கூறினார்.

முன்னதாக, பல சீன வல்லுநர்கள் இந்த வைரஸ் வௌவால்களிலிருந்து தோன்றியதைக் கண்டுபிடித்தனர், அதன் பிறகு சீனா இதுபோன்ற விலங்குகளை வர்த்தகம் செய்வதற்கு தற்காலிக தடை விதித்து உள்ளது.

# சிரியாவின் ஏவுகணைத் தாக்குதலில் பயணிகள் விமானம் அருந்தப்பில்!

டமாஸ்கஸ், பெப்.10

சிரியாவில் இராணுவத்தின் ஏவுகணை வீச்சில் பயணிகள் விமானம் தப்பியது. இதில் விமானப் பயணிகள் 172 பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தனர்.

சிரியாவில் ஈரான் ஆதரவு பெற்ற பயங்கரவாத குழுக்கள் இருக்கின்றன எனக் கூறி அந்த நாட்டின் மீது இஸ்ரேல் தொடர்ந்து, வான்தாக்குதல் நடத்தி

## பயணிகள் 172 பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தனர்

வருகிறது. ஆனால் இதனை திட்டவட்டமாக மறுக்கும் சிரியா தங்களின் இராணுவ நிலைகளை குறி வைத்தே இஸ்ரேல் வான்தாக்குதல்களை நடத்துவதாக கூறுகிறது.

இந்த விவகாரத்தில் சிரியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது. சிரியா எல்லைக்குள் நுழைந்து வான்தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் போர் விமானங்களை சிரிய வான் பாதுகாப்புப் படை ஏவுகணைகள் மூலம் தாக்கி அழிக்கிறது.

இந்த நிலையில் வியாழன் அதிகாலை சிரியா தலைநகர் டமாஸ்கஸ் அருகே கிஸ்வா நகரில் ஈரான் ஆதரவு பயங்கரவாதிகளை குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் 12 பேர் பலியாகினர்.

அதனை தொடர்ந்து மீண்டும் நேற்று முன்தினம் நள்ளிரவு இஸ்ரேல் இராணுவத்தின் எவ்-16 ரக போர் விமானங்கள் 4 டாமஸ்கஸின் புறநகர் பகுதிகளில் நுழைந்து தாக்குதல் நடத்தின.

அந்த விமானங்கள் சக்தி வாய்ந்த 8 ஏவுகணைகளை வீசித் தாக்கின. அதனை தொடர்ந்து, சிரிய வான் பாதுகாப்புப் படை உடனடியாகத் தற்காப்பு நடவடிக்கையில் இறங்கியது. தங்கள் வான்பரப்பில் நுழைந்த இஸ்ரேல் போர் விமானங்களை குறிவைத்து, தரையில் இருந்து ஏவுகணைகளை வீசியது.

இதற்கிடையே, ஏர்பஸ் 320 ரக விமானம் ஒன்று 172 பயணிகளுடன், டமாஸ்கஸ் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக வந்தது. அப்போது சிரிய வான்பாதுகாப்பு படை ஏவிய ஏவுகணைகள் இந்த பயணிகள் விமானத்தை தாக்கும் சூழல் உருவானது.

ஆனால் விமானம் உடனடியாக – கடைசி நேரத்தில் வேறு திசைக்கு மாற்றப்பட்டு, அங்குள்ள ரஷிய விமானப்படை தளத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.

ஏவுகணை தாக்குதலில் இருந்து பயணிகள் விமானம் மயிரிழையில் தப்பியதால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. விமானத்தில் இருந்த 172 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தனர்.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இகோர் கோனாஸென்கோவ் கூறியவை வருமாறு: –

விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் சரியான நேரத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் தானியங்கு மயமாக்கப்பட்ட விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பின் திறமையான பணிகள் காரணமாக மட்டுமே, ஏர்பஸ் 320 விமானம் சிரியா வான்பாதுகாப்பு படையின் ஏவுகணைகள் பகுதியை விட்டு வெளியேறி மாற்று விமான நிலையத்தில் தரையிறங்க முடிந்தது.

இஸ்ரேல் போர் விமானங்கள் சிரிய வான் பாதுகாப்பு படைகளிடம் இருந்து தங்களை தற்காத்து கொள்வதற்குப்



பயணிகள் விமானத்தை ஒரு மறைப்பாக பயன்படுத்துவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றன.

இஸ்ரேல் இராணுவத்தின் இந்தத் தந்திர நடவடிக்கையால் துரதிர்ஷ்டவசமாக நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் பொறுப்பற்ற முறையில் பணயம் வைக்கப்படுகின்றன. – இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக கடந்த மாதம் ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே உச்சக்கட்ட மோதல் நீடித்த சூழலில் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இருந்து உக்ரைன் பயணிகள் விமானம் புறப்பட்டது.

ஆனால் ஈரான் புரட்சிகர படையினர் அந்த விமானத்தை எதிரி நாட்டுப் போர் விமானம் என நினைத்துத் தவறுதலாக சுட்டு வீழ்த்தினர். இதில் விமானத்தில் இருந்த 170 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானமை நினைவு கூரத்தக்கது.

# ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனத்துக்கு 13ஆயிரத்து 500கோடி ரூபா அபராதம் விதிப்பு

## அமெரிக்காவின் நியூ ஜெர்சி நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

நியூஜெர்சி,பெப்.09

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் பேபி பவுடரால் புற்றுநோய் ஏற்பட்டதாகத் தெரிவித்துஅமெரிக்காவில் 4 பேர்




தொடர்ந்த நஷ்ட ஈட்டு வழக்கில், அந்த நிறுவனத்திற்கு நியூ ஜெர்சி நீதிமன்றம் 13 ஆயிரத்து 500 கோடி ரூபா (75 கோடி டொலர்) அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

எனினும் அங்கு மாநிலங்களுக்கு மாநிலம் சட்டவிதிகள் மாறுபடுவதால் இது சுமார் 2 ஆயிரத்து 800 கோடி ரூபாவாகக் குறையும் என்று கூறப்படுகிறது.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் பேபிபவுடரில் புற்றுநோயை உருவாக்கும் ஆஸ்பெஸ்டாசின் அம்சங்கள் இருக்கின்றன எனவும், அது குறித்து வாடிக்கையாளர்களிடம் அந்த நிறு வனம் எந்த அறிவிப்பையும் செய்யவில்லை எனவும் குற்றச்சாட்டு.

இதுதொடர்பாக இந்த நிறுவனத்தின் மீது 16 ஆயிரத்திற்கும் அதிகமான சிவில் வழக்குகள் தொடரப்பட்டுள்ள நிலையில் கிரிமினல் குற்ற விசாரணையும் நடக்கிறது.

குற்றச்சாட்டை மறுத்துள்ள ஜோண்சன் அண்ட் ஜோண்சன் நிறுவனம் தவறான விவரங்களின் அடிப்படையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அதை எதிர்த்து மேன்முறையீடு செய்ய உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# சீன அதிபரைப் பாராட்டிய அமெரிக்க அதிபர் டிரம்ப்



கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை சீனா மிகச்சிறப்பாக செய்து வருவதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் பாராட்டியுள்ளார்.

சீன அதிபர் ஜின்பிங்குடன் தொலைபேசியில் பேசினார் எனவும், கொரானா குறித்தே இருவரும் பெரும்பாலும் விவாதித்தனர் எனவும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு எதிராக சீனா கடுமையாகப் போராடி வருகிறது என்றும், மிகச்சிறப்பான முறையில் அவர்கள் பணியாற்றி வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்துடனும், அமெரிக்காவின் சுகாதாரத்துறை நிறுவனமான நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்துடனும் சீனா தொடர்பில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா விவகாரத்தில் சீனாவும் அமெரிக்காவும் இணைந்து பணியாற்றி வருகின்றன எனவும் டிரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் 2 பேர் அண்மையில் சீனா சென்று வந்தவர்கள் அல்லர் என்றும் அமெரிக்க சுகாதாரத் துறைச் செயலர் அலெக்ஸ் அசார் தெரிவித்துள்ளார்.

# காணாமற்போனோர் எவ்வாறு இறந்தனர்?

## வெளிப்படுத்தக் கோருகிறார் ஹரி ஆனந்தசங்கரி



மொன்றியல், பெப். 09
காணாமல் போனவர்கள் இறந்து விட்டனரா? அப்படியானால் அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்று கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி கேள்வியெழுப்பியுள்ளார்.

கனேடிய நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்படுதல், வெள்ளை வான்களில் ஆள்களைக் கடத்திக் காணாமல் ஆக்குவது தொடர்பாக இலங்கை நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களை நான் சந்தித்தேன். அவர்கள் காணாமற்போன தமது அன்புக்குரியவர்களுக்காக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

2009ஆம் ஆண்டுமே மாதம் தனது கணவரையும் ஏனையோரையும் இராணுவ பஸ்ஸில் அழைத்துச் சென்றதை ஆசிரியை ஒருவர் பார்த்துள்ளார். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட ஆண்களும், பெண்களும் காணாமற்போயுள்ளனர்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணாமற்போனவர்கள் இறந்துவிட்டார்கள் கடந்த மாதம் கூறியிருந்தார். காணாமற்போனவர்களின் உறவினர்கள் சிலர் கனடாவில் வசிக்கின்றனர். இவர்கள் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று கேள்விக்குப் பதில் கேட்கின்றனர். காணாமற்போனவர்கள் இறந்துவிட்டனரா, எவ்வாறு அவர்கள் இறந்தனர், அவர்களின் மரணத்திற்கு யார் பொறுப்புக் கூறவேண்டும் என கேட்கின்றனர். உண்மை மற்றும் நீதிக்காக சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். இது தற்போது கட்டாயம் தேவையானது – என்றார். (ஐ)

# பிரசவகால விடுமுறை 6 மாதங்களாக உயரும்

கொழும்பு, பெப். 09
பெண் அரச உத்தியோகத்தர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய 4 மாதகால பிரசவ விடுமுறையை 6 மாதம் வரை நீடிப்பது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் தற்போதைய சனத்தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களாகவே இருக்கின்றனர். அந்தந்தப் பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்குத் தேவையான நிதியியல் ஒத்துழைப்புகளை வழங்கக் கூடிய வகையிலான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்களுக்குப் பலமாக அமையும்.

பொதுநிர்வாகச் சட்ட திட்டங்களுக்கமைய பெண்களுக்கு மகப்பேற்றுக் காலங்களுக்கான 84 வேலை நாள்களுக்கு முழுமையான சம்பளத்துடனான விடுமுறையும் அதற்கு மேலதிகமாக பகுதியளவிலான சம்பளத்துடனான 84 நாள் விடுமுறையும் தேவைப்பட்டால் சம்பளம் இல்லாத 84 நாள் விடுமுறையும் வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு.

அரச உத்தியோகத்தர்களுக்குச் சம்பளத்துடனான 4 மாத மகப்பேற்று விடுமுறை காலத்தை 6 மாத காலம் வரையில் நீடிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது – என்றார். (ஐ)

# திருமண விழாவில் மைத்திரி அவமானப்படுத்தப்பட்டாரா?



கொழும்பு, பெப். 09
முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிமின் மகளின் திருமண நிகழ்வில் தாம் மிகுந்த அவமரியாதைக்குட்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வருத்தம் தெரிவித்துள்ளார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வில் ஏன் கலந்து கொள்ளவில்லை எனக் கேட்டபோது தனக்கு நெருக்கமானவர்களிடம் முன்னாள் ஜனாதிபதி இந்த தகவலைக் கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இந்தத் திருமண நிகழ்வுக்குச் சென்றபோது, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் தன்னை இடையில் நிறுத்தினர் எனவும், அந்த இடத்தில் இருந்து தான் நடந்து செல்லும் நிலைமை ஏற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் தான் இம்முறை சுதந்திர தினத்திலும் இப்படியான நிலைமை ஏற்படும் என நினைத்துச் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை எனவும் மைத்திரிபால குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுத்துவக்கு வெடித்து படுகாயமுற்றார் ஒருவர்

வவுனியா, பெப். 09
வவுனியா – மகாகச்சகொடிப் பகுதியில் கட்டுதுவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த ஒருவர், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்று முன்தினம் காலை காட்டுப் பகுதிக்கு சென்றபோது, காட்டு விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்தார்.

உடனடியாக அவர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கூட்டணியில் இணைவது தொடர்பில் சிறிகாந்தா தரப்பு முடிவில்லையாம்!

கொழும்பு, பெப். 09
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்து கொள்வது குறித்து தமிழ் தேசியக் கட்சி இதுவரை உத்தியோகபூர்வமாக எந்தவித முடிவையும் எடுக்கவில்லை எனவும், தமிழ் இனத்தின் விடிவிற்காக எந்தவித விட்டுக்கொடுப்பிற்கும் செல்ல முடியும் என்றும் தமிழ் தேசியக் கட்சியின் பிரசாரச் செயலாளர் ஜெயரட்ணம் ஜனார்த்தனன் கூறினார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சி தனியாகக் களமிறங்க உள்ளதாகக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதேவேளை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் தமிழ் தேசியக் கட்சி இணைந்துகொள்ளவுள்ளதாக சி.வீ.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்ட பதிலை அளித்தார். (ஐ)

# கண்டி, நுவரெலியாவில் முழு வசதிகள் கொண்ட இரு தமிழ்ப் பாடசாலைகள் உதயமாகவேண்டும்

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, பெப். 09
கண்டி மாவட்டத்துக்கு முழுமையான வசதிகளைக் கொண்ட தமிழ்ப் பாடசாலையொன்றின் தேவை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதற்கு எமது ஆட்சியில் அடித்தளமிடப்பட்டது.

எனவே, இந்த ஆட்சியில் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் கோரிக்கை விடுத்தார்.

கண்டி திகன, மாபெரிதென்ன, நித்துலேமட, செனரத்வெள ஆகிய கிராமங்களை உள்ளடக்கி மூன்றாவது முறையாகவும் போகஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இக்கிராமங்களில் பல இனங்களை, பல மதங்களை, பல கலாச்சாரங்களை சேர்ந்தவர்கள் வாழ்கின்றனர். எனவே, இப்படியான நிகழ்வுகள் இம்மக்களுக்கு இடையிலான புரிந்துணர்வுக்கும், சகவாழ்வுக்கும் அடிப்படையாக அமைகின்றன. அத்துடன், சமூகங்களுக்கிடையில் தமது கலாச்சாரங்களை, பண்பாடுகளை பரிமாற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக கண்டி மாவட்டத்திற்கான முழு வசதிகளை கொண்ட தமிழ் பாடசாலை ஒன்றின் தேவை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. எமது அரசில் நுவரெலியா மாவட்டத்திலும், கண்டி மாவட்டத்திலும் அத்தகைய இரு பாடசாலைகளை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.



இதற்கமைய பாடசாலை அமைப்பதற்காக, கண்டி, மாபெரிதென்ன பண்ணையில் இருந்து ஐந்து ஏக்கர் நிலத்தை பெறுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அவ்வாறு உருவாகும் பாடசாலை தங்கும் இட வசதிகளுடன் கூடியதாக காணப்படும். நாங்கள் அதற்கான ஆரம்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றோம். இன்றைய அரசின் சவால்களை எதிர்கொண்டு இப்பாடசாலை உருவாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் – என்றார். (ஐ)

# வடக்கில் மீண்டும் மலேரியா நுளம்பு!

## மலேரியா தடுப்புப் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 09

மலேரியா நோய் காவியாக இனங்காணப்பட்டுள்ள நுளம்பின் பெருக்கம் துரிதமாக அதிகரித்துள்ளது.

தேசிய மலேரியா தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரசாத் ரணவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு மீண்டும் வடக்கு மாகாணத்தில் இந்த நுளம்பு இனங்காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். நகரப்பகுதி, நல்லூர் மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் கட்டுப்படுத்த முடியாத வகையில் இந்த நுளம்பு தற்போது துரிதமாகப் பெருகி வருவதாகவும் அவர் கூறினார்.

எனினும், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை தவிர வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள கிணறுகளில் இந்த நுளம்பு பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய மலேரியா தடுப்புப்பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தூய்மையான நீரிலேயே இந்த நுளம்பு பெருகுவதாகவும் கிணறுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மீன்கள் பயன்படுத்தப்படுவதாகவும், எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள கிணறுகளில் அதிக குளோரின் காணப்படுவதால் நுளம்புகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தும் மீன்கள் குறுகிய காலத்திற்குள்ளேயே உயிரிழப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் மலேரியாவினால் 53 பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் திருகோணமலை விபத்தில் காயம்!

திருமலை, பெப். 09

திருகோணமலை – கஜூவத்தை பகுதியில் இடம்பற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று மாட்டுடன் மோதுண்டதனாலேயே நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையான சுனில் சாந்த (வயது – 42), தாயாரான அனோமா தமயந்தி (வயது – 39), பிள்ளைகளான தீக்ஸன் (வயது – 10), ஸவ்மியா (வயது – 8) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் இருவர் கைது

கொழும்பு, பெப். 09

தலங்கம பகுதியில் அனுமதிப் பத்திரமன்றி வைத்திருந்த துப்பாக்கி மற்றும் சட்டவிரோத சிகரட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம – ரொபட் குணவர்தன மாவத்தையில் நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் 2000 சட்டவிரோத சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய 800 சட்டவிரோதசிகரட்டுகளையும், வெளிநாட்டு துப்பாக்கியொன்றையும் கைப்பற்றியுள்ளமையுடன் மேலும் ஒருவரைக் கைது செய்துமுள்ளனர்.

சம்பவத்தில் தலங்கம மற்றும் கொஸ்வத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 31,53 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# உடன்படிக்கைகளின் மூலம் அரசு நாட்டை படுகுழிக்குள் தள்ளுகிறது

## ஜே.வி.பியின் சந்திரசேகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.

எக்ஸ்சா மற்றும் சோபா உடன்படிக்கைகளின் மூலம் நாட்டை படுகுழிக்குள் தள்ளும் செயற்பாட்டை அரசாங்கம் செய்து வருவதாக ஜே.வி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபயவின் ஆட்சியில் மலையக மக்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. அதன்படி அவர்கள் சம்பளத்தை வழங்கினால், நாங்கள் அவர்களுக்கு ஆதரவளிப்போம்.

ஆனால், ஆட்சிக்கு வந்தபோது நாட்டை விற்க மாட்டோம் என அவர்கள் தெரிவித்தனர். ஆனால், நாட்டை இன்று விற்றுவிட்டனர்.

அக்சா, எம்.சி.சி. மற்றும் சோபா உடன்படிக்கைகளின் மூலம் நாட்டை படுகுழிக்குள் தள்ளும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷவே அக்சா மற்றும் சோபா உடன்படிக்கைகளுக்கு 2007ஆம் ஆண்டு அடித்தளம் இட்டவர் ஆவார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டவர்களே தற்போது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதாகக் கூறுகின்றனர் – என்றார். (ஐ)

# மூன்று நிறுவனங்களை 'கோப்' அழைக்க முடிவு

கொழும்பு, பெப். 09

இலங்கை கிரிக்கெட் சபை உள்ளிட்ட மூன்று நிறுவனங்களை அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அந்தக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாடாளுமன்றம் மீண்டும் கூடவிருக்கும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், தேசிய லொத்தர் சபை மற்றும் இலங்கை கிரிக்கெட் ஆகிய நிறுவனங்களை அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப்) அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட மத்திய வங்கியின் திறைசேறி முறி தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் தடயவியல் கணக்காய்வு அறிக்கை, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு எயார் பஸ்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக வெளிநாட்டில் வழங்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு உள்ளிட்ட விடயங்களையும் கோப் குழுவில் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

விசேடமாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தில் இடம்பெற்ற எயார் பஸ் கொள்வனவு மற்றும் அதற்கான கொடுக்கல்வாங்கல் குறித்து கோப் குழுவினால் தயாரிக்கப்பட்ட இரு அறிக்கைகள் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் திறைசேரி முறி தொடர்பாக கோப் குழுவின் விசாரணைகளில் வெளியான விடயங்களே, திறைசேரி முறி குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் தடயவியல் கணக்காய்வு ஆய்வுகளின் மூலமும் புலப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் கோப் குழுவின் செயற்பாடுகளுக்கு ஊடகங்கள் வழங்கிய ஒத்துழைப்புத் தொடர்பாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், தொடர்ந்தும் ஊடகங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

கோப் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளாதிருக்கும் சம்பிரதாயத்தை கோப் குழு உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் தொடர்ந்தும் பேண எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

# வேலைவாய்ப்புத் திணைக்கள ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் தொழிற்சந்தை





யாழ்ப்பாணம், பெப். 09

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைந்து ஏற்பாடுசெய்த மாபெரும் தொழிற் சந்தை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தொழிற்சந்தை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெற்றுள்ளது.

இதில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் தொழிலுக்கான ஆட்சேர்ப்பு, தொழிற் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு, தொழில் வழிகாட்டல், தொழிலுக்கான திறவுகோல், சுயதொழில் வழிகாட்டல், தொழில் முனைவோர் வழிகாட்டல் போன்ற சேவைகள் இடம்பெற்றன.

அத்துடன், தொழில்தேடுநர்களை வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பதிவு செய்யும் செயற்பாடும் இதன்போது இடம்பெற்றுள்ளது. (ஐ)




காலைக்கதிர்
Kalaikathir





# சிங்களம் சரணம் கச்சாமி! சர்வமும் ராணுவம் கச்சாமி!

பனங்காட்டான்

தனிச் சிங்களத்தில் தேசிய கீதம். வெள்ளை உடையில் இராணுவப் பதக்கங்களுடன் சிங்கக்கொடியேற்றம். பௌத்த தத்துவத்தைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் தனது கடமையென மேடை முழக்கம். இதுதான் சிங்கள பௌத்த தேசத்தின் முடிவென்றால், தாயக தேசிய கவிஞன் புதுவை இரத்தினதுரையின் 'நீங்க வேறு நாடையா! நாங்க வேறு நாடு' என்ற பாடலை இனி வரும் சுதந்திர தின நாள்களில் தமிழரின் கீத மாக்கி கறுப்புக் கொடி ஏந்துவதுதான் ஒரே வழி.

"இலங்கையுள் வாழுகின்ற ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழும் உரிமையுண்டு. அவர்கள் சுதந்திரமாக சிந்திக்கும் உரிமையையும், சுயாதீனமாக அபிப்பிராயம் கொள்ளும் உரிமை போன்று கருத்துகளை தெரிவிக்கும் உரிமையையும் நாம் எப்போதும் உறுதி செய்வோம்......

எந்த ஒரு பிரஜைக்கும் தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கு உள்ள உரிமையை நாம் எப்பொழுதும் மதிப்போம். அமைதியான ஒன்றுகூடலுக்கும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு. ஒருவர் தாம் தெரிவு செய்து கொள்ளும் பிரதிநிதிகள் ஊடாக அரசியல் செயற்பாட்டிலும், அரச நிர்வாகத்திலும் சம்பந்தப்படும் உரிமையை நாம் எப்பொழுதும் பாதுகாப்போம்."

– இப்படியாக யார், எங்கே கூறினார் என்று சொல்ல முடியுமா? அவர் பெயரைச் சொன்னால் நம்ப முடியாது. ஆனால், அவரே பகிரங்கமாக இதைச் சொன்னார்.

எழுபத்தைந்து நாள்களுக்கு முன்னர் இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவே இந்தக் கூற்றின் சொந்தக்காரர். முன்னாள் இராணுவ அதிகாரியாகவும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளராகவும் இருந்த இவர், இலங்கையின் அனைத்து மக்களையும் சமமாக மதிக்கும் ஒருவராகத் தம்மைக் காட்டிக் கொள்ள மிகப் பிரயத்தனத்துடன் வாசித்த உரை இது.

கடந்த நான்காம் திகதி கொழும்புப் பெருநகரில் இடம்பெற்ற தனிச்சிங்கள சுதந்திர தின நிகழ்வில் கோட்டாபய ராஜபக்ஷ இந்த உரையை நிகழ்த்தி, சர்வதேசத்தின் தலையை முழுமையாக கழுவ முனைந்தார் என்பதே இதன் உண்மை.

இதை நிரூபிக்கும் வகையில் அதே நிகழ்வில் அவர் நிகழ்த்திய உரையின் இன்னொரு பகுதி இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அது இதுதான்:

"இலங்கை ஒற்றையாட்சியுடைய அரசாகும். சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஜனநாயக நாடு. எனது ஆட்சிக்காலத்தில் இந்நாட்டின் பௌத்த தத்துவத்தைப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்" – என்பதுவே அவரது உரையின் சுருக்கம்.

இதனூடாகப் பார்க்கக்கூடிய சமாசாரம் என்னவெனில், சிறுபான்மை மக்களை பேய்க்காட்டி, உலக நாடுகளுக்கு தமது சமத்துவமான செயற்பாட்டை எடுத்துக்காட்ட ஒரு பகுதியையும், தன்னை ஆட்சிபீடம் ஏற்றிய சிங்கள, பௌத்த மக்களுக்கு இனரீதியான உத்தரவாதம் வழங்குவதை நிரூபிக்க இன்னொரு பகுதியையும் தமது உரையில் மிகப் புத்திசாலித்தனமாக(?) சேர்த்துக் கொள்ள கோட்டாபய முயன்றுள்ளமை பளிச்செனத் தெரிகிறது.

கோட்டாபயவின் சிந்தனை ஓட்டத்தைப் பூரணமாகப் புரிந்த இந்த உரையின் மூலவருக்கு (தயாரிப்பாளர்) நிச்சயம் பாராட்டைத் தெரிவிக்க வேண்டும். அறிவுபூர்வமாகவன்றி உணர்வுபூர்வமாக இலங்கையின் சுதந்திர நாளை கோட்டாபய சுவைத்துள்ளார்.

இலங்கையின் முதலாவது ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒரு தடவை லண்டன் டெலிகிராப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், "எனது மக்களுக்காக நான் எதனையும் செய்வேன். தமிழர்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை" –என்ற சாரப்பட்ட தெரிவித்த கருத்தை இலகுவில் மறந்துவிட முடியாது.

அதேபாணியில், கோட்டாபய தமது வெற்றிக்களிப்பு உரையின்போது சிங்கள,பௌத்த மக்களின் வாக்குகளால்தான் தாம் வெற்றியீட்டினார் எனக் கூறியமையையும், அதன் வழியில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றமையையும் பார்க்க முடிகிறது.

இலங்கை பல்வேறு இன,மதங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை மறந்து, இங்கு தமிழும் ஓர் உத்தியோகபூர்வ மொழி என்பதையும் நினைவில் கொள்ளாது, இவர் ஆற்றிய உரை எத்திசை நோக்கி நாடு செல்கிறது என்பதை அவரது முதல் நூறு நாள்களுக்குள்ளேயே அடையாளம் காட்டுகிறது.

எனது ஆட்சிக்காலத்தில் என்ற ஆணவத்தொனியும், தமது மதமான பௌத்தத்தை மட்டுமே பாதுகாப்பேன்,வளர்ப்பேன் என்ற அகங்கார அறிவிப்பும் இத்தீவில் சிறுபான்மை இனங்களின் எதிர்காலம் பற்றிய பெரும் கேள்விக்குறியை எழுப்பியுள்ளன.

கடந்த நான்கரை ஆண்டுகாலப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழர் தாயகத்தில் ஆயிரம் விகாரைகளை அமைப்பேன் என்று கூறியமையையும், அப்பணிகளை கலாசார திணைக்களத்துக்குப் பொறுப்பாகவிருந்த சஜித் பிரேமதாஸ அமைதியாக நிறைவேற்ற ஆரம்பித்தமையையும், கோட்டாபய



பாதுகாத்து வளர்க்க விரும்புகின்றமையை அவரது உரை கோடு காட்டி பளிச்சென தெரிய வைக்கிறது. இதற்காகச் சிங்கள் குடியேற்றங்களையும், பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் தமிழர் தாயக பூமியில் அவர் உருவாக்க இருப்பதே அவர் விரும்பும் ஜனநாயகப் பாதை.

ஜனாதிபதியான பின்னர் வெள்ளைச் சட்டையுடன் மேடைகளில் தோன்றி உபதேசம் செய்யும் இவரே, வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப் போராளிகளை கொலை செய்யுமாறு உத்தரவிட்டாரென்று அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பகிரங்கமாகக் கூறியதற்கு இன்றும் நேர்மையான பதில் இல்லை.

இலங்கையின் வரலாற்றில் அந்நாட்டின் தலைவர் ஒருவர் சுதந்திர தின விழாவில் முதன்முறையாக தமது மேலாடையில் இராணுவப் பதக்கங்களை அணிந்து தோன்றினார் என்றால் அதன் உள்நோக்கும் புறநோக்கும் என்ன?

மெல்ல,மெல்ல இலங்கை இராணுவ ஆட்சிக்குள் தன்னைப் புகுத்திக் கொள்கிறது என்று அர்த்தம் கொள்ளலாமா?

அதுதான் உண்மை என்பதுபோல தனிச்சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. வாளேந்தும் சிங்கக்கொடி சுதந்திர தினத்துக்கு ஏற்றப்படுகிறது. இவைகளைப் பார்க்கும்போது தமிழீழத் தேசிய கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'நீங்க வேறு நாடையா! நாங்க வேறு நாடு' – என்ற பாடல் யதார்த்தமானதாகத் தெரிகிறது. முடிந்தால் இனிவரும் இலங்கையின் சுதந்திர தின நாள்களில் தாயகத் தமிழர்கள் இந்தப் பாடலை ஒலிக்கவிட்டு கறுப்புக் கொடி ஏற்றலாம். இதுவே மிகமிகப் பொருத்தமான கீதமாக அமையக்கூடும். இலங்கையில் ஒருபோதும்இராணுவ ஆட்சி ஏற் படாது என்ற கோட்டாபயவின் கூற்றுக்குஎதிர்மாறாகவேஎல்லாம்நடைபெறுகின்றன.

இதுவரை 47க்கும் அதிகமான முன்னாள் படைத்துறையினர் முக்கியமான பதவிகளுக்கு நியமனமாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. இவை அனைத்தும் கொழும்பை மையமாகக் கொண்ட அரசாங்கப் பதவிகள்.

திருமலை மாவட்ட அரசாங்க அதிபராக ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் றுவான் குலதுங்க இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். வவுனியா அரசாங்க அதிபராகவுமிருந்த முஸ்லிம் சமூகத்தவர் திடீரென கொழும்புக்கு மாற்றப்பட்டு சிங்களவர் ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராக முதன்முறையாகஒருசிங்களவர்நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த சில மாதங்களின் பின்னர் நடைபெறப் போகும் பொதுத்தேர்தலுக்குப் பின்பு, தமிழர் தாயகத்தின் மற்றைய மாவட்டங்களுக்கும் கூட சிங்களவர்கள் அரசாங்க அதிபர்களாகவும், நிர்வாகத் தலைமை அதிகாரிகளாகவும் நியமனமானாலும் ஆச்சரியப்பட நேராது.

இவ்வருட சுதந்திர தினத்துக்கு விசேட பிரமுகராக ரஷ்யாவின் தரைப்படை பிரதம தளபதி ஒலக் சலிக்கோ கலந்து கொண்டார். இதற்கு முன்னர் எந்தவொரு சுதந்திர தின விழாவிலும் இத்தகையஇராணுவ அதிகாரியொருவர் இவ்வாறு கலந்து கொள்ளவில்லையென கொழும்பின் 'த ஐலண்ட்' பத்திரிகை சுட்டியுள்ளது. இவர் ஒருநாள் கோட்டாபயவுடன் இரகசியப் பேச்சையும் மேற்கொண்டார்.

இந்தச் சுதந்திர தின விழாவில் ஆறாயிரத்துக்கும் அதிகமான படையினரின் அணிவகுப்பு இடம் பெற்றது. இவர்களுள் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானோர் இலங்கை இராணுவத்தின் சிங்ஹ, ஜெமுனு, கஜப, விஜய படையணிகளைச் சேர்ந்தவர்கள். நூற்றியைம்பதுஈராணுவ வண்டிகள் வீதிகளில் ஊர்வலம் வந்து இராணுவ வளர்ச்சியை எடுத்துக் காட்டின.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தானின் விமானப் படைத் தளபதி முஜாமிட் அன்வர்கான் மேலும் சில மூத்த அதிகாரிகளுடன் ஆறாம் திகதி கொழும்புக்குச் சென்றுள்ளார். சீனாவில் கொரோனா உயிர்பறிக்கும் நோய் ஏற்பட்டிராவிடில் சீனாவின் படைத்தளபதியும் கூட இவ்வாறு கொழும்பு சென்றிருக்கக்கூடும்.

இலங்கை அரச சேவையில் நிர்வாக சேவையின் முதலாம், இரண்டாம் தர அதிகாரிகள் பலர் இருந்தும் அவர்களின் பதவிகளுக்கு படைத்தரப்பினரை கோட்டாபய நியமித்து வருகிறார். படைத்துறை அதிகாரிகளால் மட்டுமே ஊழலற்ற, நேர்மையான நிர்வாகத்தை மேற்கொள்ள முடியுமென்ற கோட்டாபயவின் கூற்று நிர்வாகத்துறை அதிகாரிகளை அதிர்வடையச் செய்துள்ளது.

முற்றுமுழுதாக இலங்கையின் நிர்வாக அலகு ராணுவ மயமாகப் போவதை அனுமானிக்க முடிகிறது. இவ்வகையான எண்ண ஓட்டமானது இலங்கையை சோசலிஸ இராணுவக் குடியரசாக மாற்றி விடலாம் என்பதே பலரின் பொதுப்படையான கருத்து.

இவ்விடயத்தில் ஜனாதிபதி தம்மை இப்பதவிக்குக் கொண்டு வந்த தமது கட்சியினரைக் கூட மதிப்பவராகக் காணப்படவில்லை. 'ஆறு கடந்தபின் அண்ணன் என்னடா, தம்பி என்னடா' என்ற நிலை இவ்வருடப் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் குரக்கன் சால்வை குடும்பத்துள் குழப்பத்தை ஏற்படுத்தும் சாத்தியம் தெரிகிறது.

அழகான இந்து சமுத்திரத் தீவு, நாயுடன் படுத்தால் மிஞ்சும் உண்ணியாகப் போகிறது.

நன்றி - பதிவு இணையம்

'காஷ்மீரை ஆக்கிரமித்துள்ளது இந்தியா' என்று மலேசியப் பிரதமர் மகாதீர் தெரிவித்த கருத்தையடுத்து, சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலை மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்ய இந்திய அரசு சில கட்டுப்பாடுகளை விதித்தது.

'ஆக்கிரமிப்பு' என்ற ஒற்றைச் சொல் இந்தியா – மலேசியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையே மறைமுக வர்த்தகப் போரை தொடக்கி வைத்திருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

இந்நிலையில், நமது வாழ்க்கையில் பாமாயிலின் முக்கியத்துவத்தை விளக்குகிறது இந்த கட்டுரை.



### தினசரி வாழ்க்கையின் அங்கம்

இன்று காலையில் நீங்கள் பயன்படுத்திய ஷாம்பூ அல்லது சோப்பு, பற்பசை, வைட்டமின் மாத்திரைகள் அல்லது மேக்கப் பொருள்களில் அது இருந்திருக்கும். காலை சிற்றுண்டிக்காக பாணை டோஸ்ட் செய்யும் போது பயன்படுத்தி இருக்கலாம். அல்லது ரொட்டி மீது தடவிய செயற்கை வெண்ணெயில் அல்லது உங்கள் காபியில் பயன்படுத்திய கீரிமரில் இருந்திருக்கலாம். இன்றைக்கு நீங்கள் பயன்படுத்தியது பாமாயிலாகத்தான் இருந்திருக்கும் என்பது ஏறத்தாழ நிச்சயமான விஷயம்.

உலகில் மிகவும் அதிக பயன்பாட்டில் உள்ள தாவர எண்ணெய் பாமாயில். 50 சதவீத நுகர்வோர் பொருள்களில் பாமாயில் உள்ளது. தொழிற்சாலை பயன்பாடுகள் பலவற்றிலும் அது பங்கு வகிக்கிறது. 2018 இல் விவசாயிகள் 77 மில்லியன் தொன்கள் பாமாயில் உற்பத்தி செய்திருக்கிறார்கள். 2024க்குள் இது 107.6 மில்லியன் தொன்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நம் வாழ்வில் இணைந்த பொருளாக பாமாயில் இருக்கிறது. அதன் விசேமான இரசாயன பண்புதான் அதற்குக் காரணம். மேற்காசிய எண்ணெய் பனை விதைகளில் இருந்து எடுக்கப்படும், வாசனையற்ற, வெளிறிய நிறத்தில் உள்ள இந்த எண்ணெய், உணவுப் பொருளுடன் சேர்க்க செளகரியமானதாக இருக்கிறது. இதன் உருகும் வெப்ப நிலை அதிகம். நிறை கொழுப்பு அளவும் அதிகம்.




வெப்பமான பகுதிகளில் எண்ணெய் பனைகளை வளர்ப்பது எளிது. விவசாயிகளுக்கு நல்ல லாபம் தரக் கூடியது. வளமில்லாத மண்ணாக இருந்தாலும் நன்கு வளரக் கூடியது. அதனால் சமீப கால ஆண்டுகளாக இதை வளர்க்கும் நிலப்பரப்பு அளவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் எண்ணெய் பனை பெருமளவு வளர்ப்பதற்காக மலேசியா மற்றும் இந்தோனேசியாவில் வனங்கள் அழிக்கப்படுகின்றன எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் வன உயிரினங்கள் ஆபத்துக்கு ஆளாகியுள்ளன.

உராங்குட்டான் போன்ற அரிய உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இந்த இரு நாடுகளில் மட்டும் சுமார் 13 மில்லியன் ஹெக்டர் பரப்பில் எண்ணெய் பனை வளர்க்கப்படுவதாக அந்த அரசுகள் கூறியுள்ளன. உலக உற்பத்தியில் ஏறத்தாழ பாதியளவு உற்பத்தி இந்த இரு நாடுகளில் நடைபெறுகிறது. 2001 இல் இருந்து 2018 ஆம் ஆண்டுகளுக்குள் இந்தோனேசியாவில் 25.6 மில்லியன் ஹெக்டர் வனப் பகுதிகளில் மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என உலகளாவிய வனப் பகுதி கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது. இது ஏறத்தாழ நியூசிலாந்து நாட்டின் அளவுக்கு இணையானது.

எனவே பாமாயிலுக்கு மாற்று ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டிய நெருக்கடி அரசுகளுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் ஏற்பட்டுள்ளது. ஆனால், பிரமிக்கத்தக்க பொருளை அகற்றுவது அவ்வளவு எளிதானதல்ல. தங்களது உற்பத்திப் பொருள்களில் இருந்து பாமாயிலை முழுமையாக நீக்கிவிடப்போவதாக 2018 இல் அறிவித்த ஐஸ்லாந்து சூப்பர் மார்க்கெட் சங்கிலித் தொடர் நிறுவனத்துக்குப் பாராட்டுகள் குவிந்தன. ஆனால் அடுத்த ஆண்டில், சில பொருள்களில் இருந்து பாமாயிலை நீக்குவது மிகவும் சிரமமாக இருந்தது. எனவே அந்தப் பட்டியலில் இருந்து தன் பெயரை அந்த நிறுவனம் விலக்கிக் கொண்டுவிட்டது.



இதே குணாதிசயங்களைக் கொண்ட வேறொரு தாவர எண்ணெயை கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான் மிகவும் பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும். இதற்கிடையில், காட்டாமணக்கு, சால் மரங்களின் பூக்களில் இருந்து எடுக்கும் எண்ணெய், ஜோஜோபா எண்ணெய், கொக்கும் பழங்கள், மாம்பழ விதையில் உள்ளே இருக்கும் பருப்பு உள்ளிட்ட தாவர பொருள்களைக் கலந்து எண்ணெய் தயாரிக்கும் முயற்சியில் உணவு மற்றும் அழகுசாதன தயாரிப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

பாமாயில் பயன்பாட்டில் இருந்து இந்த உணவு வகைகளை மட்டும்தான் நீக்க வேண்டும் என்றில்லை. கலோரி மதிப்பு அதிகம் உள்ளதாகவும், அவசிய கொழுப்பு அமிலங்கள் அதிகம் உள்ளதாவும், கொழுப்பில் கரையும் வைட்டமின்களை உறிஞ்சிக் கொள்ள உதவுவதாகவும் பாமாயில் இருக்கிறது. உலக அளவில் மாமிசம், கோழியினம் மற்றும் பால் பொருள்களின் தேவை அதிகரித்து வரும் நிலையில், பாமாயில் தேவையும் அதிகரிக்கும்.

கோழித் தீவனத்தில் பாமாயிலுக்கு மாற்றாக பொருத்தமான சத்தான உணவை பயன்படுத்த முடியுமா என்பது பற்றி போலந்தில் உள்ள போஜ்னான் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.

பூச்சிகளைப் பயன்படுத்த முடியுமா என முயற்சிக்கிறார்கள். வண்டினங்கள் புழுநிலையில் இருக்கும் போது எடுத்துக் கோழித் தீவனத்தில் இந்தக் குழுவினர் கலந்து கொடுத்த போது, நல்ல வளர்ச்சி இருப்பதையும், இறைச்சியின் தரம் மேம்பட்டிருப்பதையும் கண்டறிந்தனர். இந்தப் புழுக்களில் புரதச் சத்து அதிகமாக இருப்பதையும் அறிந்தனர். உணவுக் கழிவில் இருந்துஇவற்றைஉருவாக்கி விட முடியும்.

உயர் தரத்திலான மாட்டிறைச்சித் துண்டுகளுக்குப் பதிலாக விலங்குகளுக்கு பூச்சி இனங்களைச் சார்ந்த உயிரினங்களை உணவாகப் பயன்படுத்துவது நல்லதாக இருக்கும் என்றும், அது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் பிரிட்டிஷ் கால்நடை அறிவியல் அமைப்பு சமீபத்தில் முடிவுக்கு வந்துள்ளது.

பாசியினங்களில் சாதாரணமாக கிடைக்கும் எண்ணெயை விட இரு மடங்கு எண்ணெய் உற்பத்தி செய்யும் ஒருவகை பாசியைத் தாங்கள் உருவாக்கியிருப்பதாக 2017 இல் எக்கோன்மொபில் மற்றும் சிந்தடிக் ஜெனோமிக்ஸ் அமைப்பு அறிவித்தது.

கடந்த ஆண்டு கார் தயாரிப்பு நிறுவனமான ஹோன்டா நிறுவனம், ஓஹியோவில் உள்ள தங்களுடைய என்ஜின் பரிசோதனை மையங்களில் இருந்து வெளியாகும் கரியமில வாயுவை ஈர்த்துக் கொள்ளும் தன்மையுள்ள பாசிகள் வளர்ப்பு வளாகத்தை பரீட்சார்த்த அடிப்படையில் நிறுவியது. இதை பரவலாக்கவும் அந்த நிறுவனம் உத்தேசித்துள்ளது. சான் பிரான்சிஸ்கோ நகரைச் சேர்ந்த சோலாஜைம் என்ற உயிரி வேதியல் நிறுவனம், பாசி வகைகளில் இருந்து வாகனங்கள், விமானங்களின் எரிபொருள் மற்றும்ஈராணுவ பயன்பாட்டுக்கான எரிபொருள்கள் தயாரித்திருக்கிறது.

ஆனால், பொருளாதார ரீதியில் சந்தையில் போட்டியிடக் கூடிய நிலையில், பாமாயில் அளவுக்கு இவற்றை உருவாக்குவது பெரிய தடையாக இருக்கும் என தெரிகிறது. 2013 ஆம் ஆண்டில் முன்மாதிரி பாசி வளர்ப்பு வளாகத்தை ஓஹியோ பல்கலைக்கழகம் உருவாக்கியது. ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், அதில் சிறிதளவுதான் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அதை நிர்வகித்து வரும் மெக்கானிக்கல் பொறியாளர் டேவிட் பேலெஸ் ஒப்புக்கொள்கிறார்.

"சுருக்கமாகச் சொன்னால் இல்லை என்றுதான் கூற வேண்டும். இலக்கை நாங்கள் நெருங்கவில்லை. வணிகச் சந்தையில் போட்டியிடும் அளவுக்கு அதை உருவாக்குவது பெரிய சவாலாக இருக்கிறது" என்று அவர் கூறுகிறார். "உங்களுக்கு நல்ல செய்தி சொல்ல வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### புதிய நம்பிக்கை

பாமாயிலுக்கு மாற்றாக எங்களால் அதை உருவாக்க முடியாமல் போனாலும், அது உருவாக்கப்படும் முறையை மாற்றி சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தை நாங்கள் கட்டுப்படுத்த முடியும். அதற்கு நாங்கள் சற்று பின்னோக்கிப் பார்த்து, பாமாயிலின் தேவையை எது நிர்ணயிக்கிறது என்பதை நாங்கள் கவனிக்க வேண்டும்.

ஒரு ஹெக்டரில் எண்ணெய் பனை வளர்த்தால், ஆண்டுக்கு நான்கு டன் தாவர எண்ணெய் கிடைக்கும். கடுகில் 0.67 டன், சூரியகாந்தியில் 0.48 டன், சோயாபீன்ஸில் வெறும் 0.38 டன் அளவுக்கு தான் எண்ணெய் கிடைக்கும் என்பதுடன் ஒப்பிடும் போது இது அதிக அளவாக இருக்கிறது. நன்கு பராமரிக்கப்படும் எண்ணெய் பனை மூலம், அதே பரப்பளவு நிலத்தில் விளையும் சோயாவைவிட 25 மடங்கு அதிகமான எண்ணெய் கிடைக்கும். அந்த வகையில், பாமாயிலுக்கு மாற்றாக நாம் புதிதாக உருவாக்கும் உணவு எண்ணெயை தயாரிக்க அதிக நிலம் தேவைப்படும். எனவே வனங்கள் அழிப்பு இன்னும் அதிகரிக்கும்.

ஆனால் சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் எண்ணெய் பனை வளர்ப்பது சாத்தியம். மேற்கத்திய நாடுகள் பலவும் ஆர்.பி.எஸ்.ஓ. சான்றளிப்பு பெற்ற பாமாயிலை மட்டுமே வாங்குகின்றன. ஆனால், அந்தச் சான்றளிப்பு பெற்ற எண்ணெய் பயன்பாடு குறைவாக உள்ளது. அதற்கு கூடுதல் விலை தர மக்கள் தயாராக இல்லை. நீடித்த நிலைப்புத்திறன் உள்ள எண்ணெய் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், சான்றளிப்பு பெற்ற எண்ணெயை சந்தையில் லேபிள் இல்லாமல் சாதாரணமாக உற்பத்தியாளர்கள் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எண்ணெய் பனை வளர்ப்பவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு ஆர்.பி.எஸ்.ஓ. அமைப்புக்கு போதிய அதிகாரம் இல்லை, அது செயலற்றதாக உள்ளது என்று குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

"நீடித்த நிலைப்புத்திறன் உள்ள பாமாயில் உற்பத்தி செய்ய வேண்டும் என்று மலேசிய பாமாயில் வாரியத்தினர் பேசுகின்றனர். ஆனால் அதை எப்படி விற்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை" என்று சில காலம் முன்பு வரை சி.எஸ்.ஐ.ஆர்.ஓ. ஆராய்ச்சி மையத்தில் பணிபுரிந்த தாவரவியல் விஞ்ஞானி கைலே ரெனால்ட்ஸ் கூறுகிறார்.

(17 பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

# உலகம் முழுவதும் அமைதிக்காக செப நாள்களை உருவாக்குங்கள்!

## இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் ஆயர்கள் அழைப்பு

உரையாடல் பாதைக்கும், பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கும், உலகளாவிய சட்டத்தை எந்த நிபந்தனையுமின்றி மதிப்பதற்கும், அனைத்து தரப்பினரும் முன்னுரிமை கொடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உலகில் அமைதி நிலவ ஒன்றிணைந்து உழைப்போம் மற்றும் அதற்காக இறைவனிடம் மன்றாடுவோம் என்று இலத்தீன் அமெரிக்க ஆயர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களோடு செபத்தில் ஒன்றிணைகிறோம், அனைத்து விதமான வன்முறை மற்றும் சமுதாயப் பிரிவினைகளையும் புறக்கணிக்கின்றோம் என்று கூறியுள்ள இலத்தீன் அமெரிக்க ஆயர் பேரவை, ஒருவரையொருவர் மதித்தல், நல்லிணக்கம், நன்றாகப் புரிந்துகொள்தல், பெரும் பதற்றச்நிலைகளைத் தவிர்ப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்தல் ஆகியவற்றுக்காக உலகின் வல்லமை மிகுந்த நாடுகளை - குறிப்பாக அந்நாடுகளின் ஆட்சியாளர்களை - விண்ணப்பிக்கிறோம் என்று கூறியுள்ளது.

'உலகில் அமைதி நிலவ ஒன்றிணைந்து செயல்படுவோம்!' - என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டுள்ள இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் ஆயர் பேரவை தற்போது இருநாடுகளுக்கு இடையே கடுமையான பதற்றநிலை உருவாகியுள்ளதைக் குறிப்பிட்டு உலகில் அமைதி நிலவ ஒன்றிணைந்து மன்றாடுவோம் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

போர், மரணத்தையும், அழிவையும் மட்டுமே கொணரும் என்று குறிப்பிட்டுள்ள இலத்தீன் அமெரிக்க மற்றும், கரீபியன் ஆயர்கள், உரையாடல் பாதைக்கும்,



பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கும், உலகளாவிய சட்டத்தை எந்த நிபந்தனையுமின்றி மதிப்பதற்கும், அனைத்து தரப்பினரும் முன்னுரிமை கொடுக்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

உலகம் முழுவதும் அமைதிக்காக செப நாள்களை ஊக்குவிக்குமாறும், அமைதியின் அரசியாம் அன்னை மரியா அமைதி எனும் கொடையை வழங்குமாறும் செபிப்போம் எனவும் இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் ஆயர்கள் தங்களின் அறிக்கையை நிறைவு செய்துள்ளனர்.

# உலகில் கிறிஸ்துவின் தூதர்களாக இளைஞர்கள் செயல்பட வேண்டும்!

## முதுபெரும்தந்தை பர்த்தலோமேயோ அழைப்பு

கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகில் கிறிஸ்துவின் தூதர்களாகச் செயல்பட வேண்டும். அழிவின் வடுக்கள் ஐரோப்பாவின் முகத்தை எவ்வாறு பாதித்துள்ளன என்பதை இளைஞர்கள் அறிந்திருக்க வேண்டும்

இன்றைய உலகில் இளைஞர்களுக்கு எண்ணிலடங்காத வாய்ப்புகள் உள்ள வேளை இக்கூட்டம் இளைஞர்களுக்கு மிகவும் மதிப்பார்ந்தது என்று கான்ஸ்தாந்தி நோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை முதலாம் பர்த்தலோமேயோ அவர்கள் கூறியுள்ளார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகில், கிறிஸ்துவின் தூதர்களாகச் செயல்பட வேண்டுமென்று பரிந்துரைத்துள்ள முதுபெரும்தந்தை முதலாம் பர்த்தலோமேயோ அவர்கள், 1989ஆம் ஆண்டில் பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்ட வேளையில் பனிப்போர் முடிந்துவிட்டது என்ற உணர்வு உட்பட ஐரோப்பா பெரிய நம்பிக்கைகளுடன் இருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்டதன் முப்பதாம் ஆண்டு நினைவுகூரப்படும் இவ்வேளையில் அழிவின் வடுக்கள் ஐரோப்பாவின் முகத்தை எவ்வாறு பாதித்துள்ளன என்பதை இளைஞர்களாகிய நீங்கள் அறிந்திருக்க வேண்டுமென்று கூறியுள்ள முதுபெரும் தந்தை முதலாம் பர்த்தலோமேயோ அவர்கள் ஒப்புரவின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

# யாழ்ப்பாணம் மறைமாவட்ட மறையாசிரியர் சவரிமுத்து ஆரோக்கியநாதர் இறைபதம்



சில்லாலை மண்ணின் மைந்தனும் யாழ் மறைமாவட்ட நிரந்தர மறையாசிரியருமான சவரிமுத்து ஆரோக்கியநாதர் 03 பெப்ரவரி 2020 அன்று இறைபதம் அடைந்தார். அவரின் இறுதிப்பயண இரங்

## சில்லாலை மண்ணின் மைந்தனுக்கு இரங்கல் திருப்பலி

கல் திருப்பலி 05 பெப்பிரவரி 2020 புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

மறை அறிவிப்பின் நுணுக்கங்களையும் திருவிவிலியத்தின் ஆழங்களையும் திருவழிபாட்டின் அர்த்தங்களையும் நன்கு அறிந்து யாழ் திருச்சபையின் மறைக்கல்வியின் சொத்தாய் பல மறை பணியாளர்களை உருவாக்கிய இவரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்.

# தமிழகத் திருஅவையில் இளைஞர் ஆண்டு 2020

'இளைஞரே! ஆற்றலோடு மாற்றம் நோக்கி...' என்ற விருதுவாக்குடன் 2020 ஆம் ஆண்டை, இளைஞர் ஆண்டாகச் சிறப்பிக்கத் தீர்மானித்துள்ளது தமிழக ஆயர் பேரவை. தமிழகத் திருஅவையில் 'இளைஞரே! ஆற்றலோடு மாற்றம் நோக்கி...' என்ற இலக்கின் அடிப்படையில் கொண்டாட உள்ள இளைஞர் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் ஒரு நோக்கத்தை மையப்படுத்திச் சிறப்பிக்கப்படும்.

வத்திக்கானில் 2018 ஆம் ஆண்டில் இளைஞர்களை மையப்படுத்தி நடைபெற்ற ஆயர்கள் உலக மாமன்றத்தின் தீர்மானங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட 'கிறிஸ்து வாழ்கிறார்' என்ற திருத்தூது ஊக்கவுரைச் சிந்தனைகளை நடைமுறைப்படுத்தும் விதமாக தமிழக ஆயர் பேரவை 2020ஆம் ஆண்டை இளைஞர் ஆண்டாகக் கொண்டாடவுள்ளது.

இந்த ஆண்டின் முக்கியத்துவத்தை இறைமக்களுக்கு உணர்த்துவதற்காக தமிழக ஆயர் பேரவைத் தலைவர் மதுரைப் பேராயர் மேதகு அந்தோனி பாப்புசாமி அவர்கள் எழுதிய சுற்றுமடல் தமிழகத்தின் அனைத்து ஆலயங்களிலும் வாசிக்கப்பட்டது.

இந்த இளைஞர் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் ஒரு நோக்கத்தை மையப்படுத்தி ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கான செயல்பாடுகளோடு கொண்டாடலாம் என ஆயர்கள் தீர்மானித்துள்ளனர் என்று அச்சுற்றுமடலில் பேராயர் பாப்புசாமி அவர்கள் கூறியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளைஞர்கள் நல்வாழ்வுக்கு எடுத்துவரும் முயற்சிகள், தமிழகக் கத்தோலிக்க இளைஞர் இயக்கம் தொடங்கப்பட்ட வரலாறு, தமிழகத் திருஅவை இளைஞர்களுக்கு ஆற்றிவரும் நற்பணிகள் போன்றவை இச்சுற்றுமடலில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

நவீன கலாச்சாரத்தில் தளர்ந்து, துவண்டு, சோர்ந்து போயுள்ள இளைஞர்களைத் தட்டிக் கொடுத்து நம்பிக்கையூட்டி இறைவன் அவர்களுக்கு விடுக்கும் அழைப்பினைத் தகுந்து தேர்ந்து துணிவுடன் பதில்மொழி நல்குவதற்காக அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியது இன்றியமையாதது என்பதனை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவாக்குத்தன்மையுடன் உணர்த்திக் கொண்டேயிருக்கிறார் என்றும் அம்மடல் கூறுகிறது.

# யாழ்ப்பாண மறை மாவட்டத்தில் 2020 துயருறுவோர் ஆண்டாகும்

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தில் 2020ஆம் ஆண்டைத் துயருறுவோர் ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளார்.

'எனக்கு அடுத்திருப்பவனில் துன்புறும் இறைவனைக் காணுதல்' என்பது காலத்தின் தேவையாகும். பாராமுகமாக அடுத்தவனைக் கடந்து போதல் எமது கலாசாரத்தில் அதிகரித்து வருகிறது. 'நான்', 'எனது' என்ற சின்ன வட்டங்களுக்குள் சிக்கிக் கொள்கிற தன்மை அதிகரித்து விருகிறது.

'இச்சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு எதையெல்லாம் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' (மத்தேயு 25:40) - என்ற கடவுளின் குரல் நல்ல சமாரியன்களாக வாழ்ந்திட எம்மைக் கேட்டுக்கொண்டே இருக்கிறது என்கிறார் யாழ் ஆயர்.



# நீங்க விரும்பி சாப்பிடும் பழங்கள் காய்கறிகளில் ஒளிந்திருக்கும் விபரீதம் என்ன தெரியுமா?

ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று விரும்பாதவர்கள் அதற்கு முயற்சி எடுக்காதவர்கள் என்று இந்த உலகத்தில் யாருமே யில்லை. யாருக்குதான் ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ வேண்டுமென்ற ஆசை இருக்காது. ஆரோக்கிய வாழ்வு என்றால் அனைவருக்கும் முதலில் நினைவு வருவது ஆரோக்கிய உணவுகள்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாம் விரும்பி சாப்பிடும் சில ஆரோக்கிய உணவுகளே நமக்கு ஆபத்தாய் முடிய வாய்ப்புள்ளது.

நாம் சாப்பிடும் பல ஆரோக்கிய மற்ற உணவுகள் மற்றும் ஆரோக்கியம் என நினைத்து நாம் சாப்பிடும் உணவுகளுக்கு பின்னாலும் மோசமான உணவு அரசியலும், நமது மடைமையும் உள்ளது. எப்போது விளம்பரங்களை பார்த்து சாப்பிடுவதை நாம் நிறுத்துகிறோமோ அப்போதுதான் நம்மால் ஆரோக்கியமான வாழ்க்கையை தொடர முடியும். இந்த பதிவில் நாம் விரும்பி சாப்பிடும் சில உணவுகளுக்கு பின்னால் இருக்கும் விபரீதங்கள் என்னென்ன என்று பார்க்கலாம்.



### அப்பிள்

அப்பிள் ஒரு உலகளாவிய ஆரோக்கியமான பொருள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அப்பிள் மீது தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் மிகவும் ஆபத்தானவை. அப்பிளின் தோல் மீது இருக்கும் பூச்சிக்கொல்லிகள் அதற்கு கீழ்புறம் இருக்கும் சதையால் ஈர்க்கப்படுகிறது. இதனை நாம் சாப்பிடும் போது அது பல ஆபத்துக்களை ஏற்படுத்துகிறது. ஆபத்தான பூச்சிக்கொல்லிகள் இல்லை என்பது உறுதி செய்தால் மட்டும் ஆப்பிளின் தோலை சாப்பிடவும். இதுமட்டுமின்றி ஆப்பிள் பளபளப்பாக இருக்க பல வேதியியல் பொருட்கள் வேறு சேர்க்கப்படுகிறது.

### குடைமிளகாய்

பெரும்பாலான பூச்சிகளுக்கு குடைமிளகாய் பிடித்த காயாக இருக்கிறது. இயற்கையாக விளைவிக்கப்பட்ட குடைமிளகாயை நீங்கள் வாங்கவில்லை என்றால் நீங்கள் ஆபத்தான அனைத்து பூச்சிக்கொல்லிகளையும் சாப்பிடுகிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

### கிட்னி பீன்ஸ்

கிட்னி பீன்ஸில் பல ஆபத்தான நச்சுப் பொருட்கள் உள்ளது. இது உங்களுக்கு பல நோய்களை உண்டாக்கும் மேலும் சிலசமயங்களில் உயிரைக் கூட கொல்லும். இந்த பீன்ஸை சமைக்கும் முன் 10 நிமிடம் கண்டிப்பாக வேகவைக்க வேண்டும். ஒருபோதும் இதனை வேக வைக்காமல் உணவுகளில் சேர்க்காதீர்கள், ஏனெனில் இது ஆபத்தை இருமடங்காக்கும்.

### திராட்சை

திராட்சை என்பது மிகவும் ஆரோக்கியமான ஒரு பழமாகும் இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைப்பதற்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் திராட்சையின் வேகமான வளர்ச்சிக்கு குளோரோபிரிப்ஸ் என்னும் பூச்சிக் கொல்லி அதிகளவில் தெளிக்கப்படுகிறது. இது கடுமையான மூளைச்சிதைவை ஏற்படுத்தும்.

### தக்காளி

தக்காளி செடிகளின் இலைகள் மற்றும் கொடிகளில் தலைச்சுற்றல், தலைவலி மற்றும் வயிற்றுப்போக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் அட்ரோபின் போன்ற ஆல்கலாய்டுவிங்கள் உள்ளன. பச்சைத் தக்காளி மிகவும் ஆபத்தான ஒரு பொருளாகும், இது மரணத்தைக் கூட ஏற்படுத்தலாம். அதிகளவு டோமடைன் உடலுக்கு பல ஆரோக்கியக் கேடுகளை ஏற்படுத்தும். தக்காளியின் இலைகளை எதற்காகவும் பயன்படுத்தாதீர்கள்.

### உருளைக்கிழங்குகள்

முதலாவதாக, உருளைக்கிழங்கு கண் விதைகளை பூச்சிக்கொல்லிகளில் ஊற்றி பூச்சிகள் முளைகளை சாப்பிடுவதைத் தடுக்கின்றன. அதன்பின்னர் அதனைச்சுற்றி களைக்கொல்லிகள் தெளிக்கப்படுகிறது, இதனால் இதற்குப் பக்கத்தில் எந்த செடிகளும் வளராது. இவை முழுமையாக வளரும் ஒவ்வொரு வாரமும் பூச்சிக்கொல்லிகளுக்கு ஆளாகிறது.

### பச்சை உருளைக்கிழங்கு

நீங்கள் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட உருளைக்கிழங்கை சாப்பிட்டால், அவை பச்சை நிறமாகத் தொடங்கும் வரை அவை உங்களுக்கு முற்றிலும் நல்லது. ஸ்பட்ஸ்கள் பச்சை நிறத்தில் செல்லத் தொடங்கும் போது, கிழங்குகளில் சோலனைன் இப்போது உள்ளது என்பதற்கானஎச்சரிக்கையாகும், அவற்றை சாப்பிடுவது உங்களை கடுமையாக நோய் வாய்ப்படுத்தும்.

### ராஸ்பெர்ரி மற்றும் ப்ளூபெர்ரி

பெர்ரி பழங்கள் மிகவும் மென்மையானவை. இயற்கையாகவே, அவை வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக உரங்களில் நனைக்கப்படுகின்றன, மேலும் பூச்சிகளைத் தடுக்காமல் இருக்க பூச்சிக்கொல்லிகளின் பல்வேறு விதமான கலவைகள் இவற்றின் மீது தெளிக்கப்படுகின்றன.

### காளான்

சந்தையில் நீங்கள் காணும் காளான்கள் பூஞ்சைக்கு ஒவ்வாமை உள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் தீங்கு விளைவிக்கா, ஆனால் சிலர் காடுகளில் உள்ள காட்டு காளான்களைப் போன்றவற்றை விரும்புவர். காட்டு காளான்களை பார்க்கும்போது உங்களால் அது சாப்பிடக் கூடியதா என்பதை கண்டறிய முடியாவிட்டால் அதனை தொட்டுவிடாதீர்கள். ஏனெனில் இது உங்களின் உயிரையே கூடப் பறிக்கலாம்.



# குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கான உடற்பயிற்சிகள்

குழந்தைகளை ஓடவிட்டு, கூடவே நாமும் ஓடலாம். இதனால் குழந்தைகளுக்குப் பெற்றோரின் மீதான நெருக்கம் அதிகரிக்கும். உடல் சோர்வும் நீங்கும். குழந்தைகளுக்கு எளிய உடற்பயிற்சிகளை சொல்லித்தரலாம். உடல் ஆரோக்கியமாக இருக்கும். மூளை நன்கு சுறுசுறுப்படையும்.

1. தசைகள், எலும்பு, மூட்டுக்களை பலமாக்கவும், கை, கால் வலுவடையவும் பயிற்சிகளை செய்யலாம். குழந்தைகளுக்கு எளிய உடற்பயிற்சிகளை சொல்லித்தரலாம். உடல் ஆரோக்கியமாக இருக்கும். மூளை நன்கு சுறுசுறுப்படையும், எப்போதும் உடல் ஃபிட்டாக இருக்கும்.

2. குழந்தைகளுக்குத் தொங்குவது என்றால் ரொம்பப் பிடிக்கும். அதிகம் உயரம் இல்லாத வீட்டின் உத்தரக் கம்பின் மேல் குழந்தையின் கைகளை வைத்து தொங்கும் பயிற்சி. இப்படி தினமும் ஐந்து நிமிடம் தொங்குவதால், தோள்பட்டை மற்றும் கரப் பகுதி நன்கு வலுவடையும்.

3. காலையில் ஸ்கிப்பிங் விளையாடச் சொல்லலாம்.

4. குழந்தைகளை ஓடவிட்டு, கூடவே நாமும் ஓடலாம். இதனால், குழந்தைகளுக்குப் பெற்றோரின் மீதான நெருக்கம் அதிகரிக்கும். உடல் சோர்வு நீங்கும்.

5. நீச்சல், டென்னிஸ், கிரிக்கெட், கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளில் பயிற்சி கொடுக்கலாம்.

6. நன்றாக ஓடி ஆடி விளையாடினாலே, அது ஒருவகையில் பயிற்சிதான். நீச்சல், ஓட்டப்பந்தயம், கால்பந்து, கிரிக்கெட் என விளையாட்டுக்களில் ஈடுபடும் குழந்தைகள், தினமும் கட்டாயம் உடல் வலுவை மேம்படுத்த சில பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

7. பள்ளியைவிட்டுத் திரும்பியதும் சைக்கிள் ஓட்டலாம், ஓடிப் பிடித்து விளையாடலாம். படிகளில் ஏறி இறங்கலாம். ரத்த ஓட்டம் சீராகும்.

8. அருகில் உள்ள பூங்காவுக்குச் சென்று அவர்களுக்குப் பிடித்த விளையாட்டை விளையாடச் சொல்லாம். எந்தப் பயிற்சியில் ஈடுபடும்போதும், பெற்றோர் பிள்ளைகளைத் தொடர்ந்து கண்காணித்தபடியே இருக்கவேண்டியது அவசியம்.

## இரவு நேரத்தில் இருமல் வாட்டி எடுக்கின்றதா?

# இருமலைப் போக்கி ஆழ்ந்த உறக்கம் பெறுவதற்கான வழிகள்!

நீங்கள் தொடர்ந்து இரவு நேரத்தில் இருமல் தொந்தரவால் பாதிக்கப்பட்டிருந்தால் கீழ்காணும் தீர்வுகளை முயற்சித்து நிவாரணம் பெறலாம். இதனால் உங்கள் தூக்கப் பிரச்சனையும் தீர்ந்துவிடும்.

### தேநீர் அருந்துங்கள்

தேநீர் தொண்டைக்கு இதமளிக்கும். சிறந்த நிவாரணத்திற்கு இஞ்சி தேநீர் பருகலாம். மற்றொரு சிறந்த தேர்வு மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட தேநீர். இரவு உறங்கச் செல்வதற்கு முன்ஒரு கப் தேநீர் பருகலாம். இருமல் மற்றும் சளிக்கான அறிகுறிகளிலிருந்துஇயற்கையான முறையில் நிவாரணம் பெற தேநீர் உங்களுக்கு உதவும்.



துளசி தேநீர் மற்றும் இதர மூலிகை கொண்டு தயாரிக்கப்பட்ட தேநீர் கூட இருமலை எதிர்த்துப் போராட உதவும்.

### தேன்

உடலுக்கு பல வழிகளில் நன்மை புரிவது தேன். குளிர் காலத்தில் தேனை உங்கள் உணவில் கட்டாயம் இணைத்துக்கொள்வது நல்லது. குறிப்பாக இரவு நேரத்தில் இருமலைத் தடுக்க தேன் சிறந்த முறையில் உதவுகிறது. வெதுவெதுப்பான பால் அல்லது ஒரு கப் தேநீருடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து பருகலாம். இன்னும் மற்ற வழிகளிலும் தேனை உங்கள் உடலில் சேர்த்துக் கொள்ள முடியும்.



### இஞ்சி

இருமலை எதிர்த்து போராடும் சக்திமிக்க தன்மை இஞ்சியில் உண்டு. புதிய இஞ்சி துண்டுகள் கொண்டு இஞ்சி தேநீர் தயாரித்து பருகலாம். சிறிதளவு இஞ்சியை எடுத்து சாறு பிழிந்து அதனுடன் சிறிதளவு தேன் சேர்த்து பருகலாம். இதனை உறங்கச் செல்வதற்கு முன் பருகுவதனால் இருமல் தடுக்கப்படும். இரண்டு மூன்று நாள்களில் உங்கள் உடலில் நல்ல முன்னேற்றமும் தெரியும்.



### வெந்நீர் ஆவி பிடிப்பது

சளி மற்றும் இருமல் பாதிப்பு ஏற்படும் போது பலரும் பயன்படுத்தும் ஒரு எளிய வீட்டுத்தீர்வு ஆவி பிடிப்பது. உடனடி மற்றும் விரைவான நிவாரணம் பெற இந்த முறை உங்களுக்குக் கைகொடுக்கும். மூக்கடைப்பில் இருந்து நிவாரணம் பெறவும் இது உதவும்.

### சூடான திரவங்கள்

இருமல் மற்றும் சளியில் இருந்து வெளிவருவதற்கு முக்கிய தேவை திரவங்கள். இரவு நேரத்தில் இருமல் ஏற்படுவதைத் தவிர்க்க, நிறைய சூடான திரவங்களை பருகலாம். வெதுவெதுப்பான பாலில் மஞ்சள் கலந்து பருகுவதால் நல்ல தீர்வு கிடைக்கும். இருமலை எதிர்த்து போராட சூப் பருகுவதும் ஒரு சிறந்த தீர்வாகும்.

# பூரிக் கடையில் வேலை செய்த டோனி!



உலகக் கிண்ணம் வென்ற இந்திய விக்கெட் காப்பாளர் – துடுப்பாட்டக்காரர் எம்.எஸ்.டோனி, பானி பூரி கடையில் வேலை செய்யும் படம் இணையத்தில் வைரலாகியுள்ளது.

2019 உலகக் கிண்ணம் முதல் கிரிக்கெட்டில் இருந்து விலகியிருக்கும் டோனி, தனது நேரத்தின் பெரும்பகுதியை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் செலவிட்டு வருகிறார்.

டோனி கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என வதந்திகள் பரவிவரும் நிலையில், அவருடைய வீடியோ ஒன்று இணையத்தில் வெளிவந்துள்ளது.

அதில் அவர் பூரி கடையில் நின்றுக் கொண்டு, முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ஆர்.பி.சிங் மற்றும் முன்னாள் இந்திய சக வீரர் பியூஷ் சாவ்லா ஆகியோருக்கு அவர் சேவை செய்கின்றமையைக் காணலாம்.

குறித்த வீடியோ மாலைதீவில் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ள இந்த வீடியோ டோனி ரசிகர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கொரோனா வைரஸ் எதிரொலி: ஒலிம்பிக் ஏற்பாடுகள் பாதிப்பு!

ஜப்பானில் நடப்பு ஆண்டு நடைபெறவுள்ள கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள், கோடைகால பரா ஒலிம்பிக் போட்டிகளிற்கான ஏற்பாடுகள் கொரோனா வைரஸ் காரணமாக பாதிக்கப்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ரோக்கியோ ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி டோசிரோ முட்டோ, இதுகுறித்து கூறுகையில், ஒலிம்பிக் போட்டிகளை இரத்துச்செய்யும் நோக்கம் எதுவும் இல்லை. எனினும் கொரோனோ வைரஸ் பரவி வருவதால் இன்னமும் 170 நாள்களில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக்போட்டிகளிற்கான முன்னேற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

ஒலிம்பிக் போட்டிகளை நோக்கிய உத்வேகத்திற்கு கொரோனோ வைரஸ் தாக்கத்தினால் பாதிப்பு ஏற்படலாம் என்பது குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன்.

கொரோனோ வைரஸ் பாதிப்பிற்கு விரைவில் முடிவு கட்டப்படும் என எதிர்பார்க்கின்றேன்' என கூறியுள்ளார்.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் காரணமாக, ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது சந்தேகம் எனச் சமூகவலைதளங்களில் செய்திகள் வெளியாகின.

ஆனால், கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள், கோடைகால பரா ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறுமென ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே அண்மையில் அறிவித்தார்.

இந்த நிலையில், ஏற்பாட்டுக் குழுவின் இந்த அறிவிப்பு பலரையும் அதிருப்தியடைய வைத்துள்ளது.

உலகின் மிகப் பெரிய விளையாட்டு தொடரான ஒலிம்பிக் தொடரை நடத்துவதற்கு ஜப்பான் கடந்த இரண்டு வருடங்களாகப் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக அரசின் பெருமளவான நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக உருவாக்கப்பட்டு வந்த பிரமாண்ட விளையாட்டு அரங்குகள் தற்போது போட்டிகளை நடத்த தயாராகவுள்ளது.

இந்தக் கோடைக்கால ஒலிம்பிக் தொடரில், வெப்பத்தை கட்டுப்படுத்தும் வகையில் அரங்கத்தின் கூரைகள் மரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பார்வையாளர்கள் மற்றும் வீரர்களை குளிர்ச்சியாக வைத்திருக்க முடியுமென வடிவமைப்பாளர்கள் நம்புகின்றனர்.

இந்தக் கோடைக்கால ஒலிப்பிக் தொடரில், பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, முகத்தின் மூலம் ஒருவரை அடையாளம் காணும் முறைமையை போட்டி அமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள், எதிர்வரும் ஜுலை மாதம் 24ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வரை, ஜப்பானின் டோக்கியோவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

206 நாடுகள் பங்கேற்கும் இத் தொடரில், 33 விளையாட்டுகளில் இருந்து 339 விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த தொடரில் 11,091 போட்டியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தோடு, இந்த ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், கோடைக்கால ஒலிம்பிக் தொடரில், 7 புதிய விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தவுள்ளன. இதனை சர்வதேச ஒலிம்பிக் குழுவும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதேபோல, கோடைகால பரா ஒலிம்பிக் போட்டிகள், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதி வரை டோக்கியோவில் நடைபெறவுள்ளது

ரோக்கியோவில் உள்ள புதிய தேசிய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்தப் போட்டித் தொடரில், 540 பிரிவுகளில் 22 விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன.

# மூன்று மாதங்கள் ஜொப்ரா ஆர்ச்சர் ஓய்வில் இருப்பார்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் ஜொப்ரா ஆர்ச்சர், மூன்று மாதங்கள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

ஆர்ச்சரின் வலது முழங்கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக, அவரை வைத்தியர்கள் மூன்று மாதம் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். இதற்கமைய அவர் ஓய்வில் இருக்கத் தீர்மானித்துள்ளார்.

கடந்த மாதம், தென்னாபிரிக்கா அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் 24 வயதுடைய இளம் வேகப்பந்துவீச்சாளரான ஜொப்ரா ஆர்ச்சர் விளையாடியிருந்தார்.

செஞ்சுரியனில் நடைபெற்ற இப் போட்டியின்போது ஜொப்ரா ஆர்ச்சருக்கு வலது முழங்கை பகுதியில் உபாதை ஏற்பட்டது. அந்தப் போட்டியில் அவர் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

அதனை தொடர்ந்து உபாதை குணமடையாததன் காரணமாக இரண்டாவது, மூன்றாவது டெஸ்ட் போட்டிகளில் அவர் விளையாடவில்லை.

அதன் பின்னர் நான்காவது போட்டியிலிருந்து எஞ்சிய ஒருநாள் மற்றும் ரி – 20 சர்வதேச தொடர்களிலிருந்து முழுமையாக அணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்னாபிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் வைத்து ஜொப்ரா ஆர்ச்சருக்கு மேற்கொள்ளப்பட்ட வலது முழங்கை ஸ்கான் பரிசோதனையில் அந்தப் பகுதியில் அவருக்கு முறிவு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்படுத்துள்ளது. அதனைத் தொடர்ந்து குறித்த முறிவு உபாதையிலிருந்து மீளுவதற்கு நீண்ட கால ஓய்வு தேவைப்படுகிறது என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணியிலிருந்து அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், அடுத்த மாத இறுதியில் இங்கிலாந்து அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரில் ஜொப்ரா ஆர்ச்சர் விளையாட மாட்டார். மேலும், இந்தியாவில் அடுத்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரிலும் ஜொப்ரா ஆர்ச்சர் விளையாட மாட்டார் என இங்கிலாந்து கிரிக் கெட் அறிவித்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் இந்திய மதிப்பில் 7.20 கோடி ரூபாய்க்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வாங்கியது. ஜொப்ரா ஆர்ச்சர் இதுவரையில் 21 ஐ.பி.எல் போட்டிகளில் 26 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் அவ்வணியின் முக்கிய வேகப் பந்துவீச்சாளரான இவர் 2020 ஐ.பி.எல் தொடரிலிருந்து இவ்வாறு விலகியிருப்பமை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு பாரிய இழப்பாக கருதப்படுகின்றது.

ஜொப்ரா ஆர்ச்சரின் உபாதை தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஜொப்ரா ஆர்ச்சருக்கு ஏற்பட்ட உபாதை தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அவருக்கு முறிவு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடர் மற்றும் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கேற்க மாட்டார். எதிர்வரும் ஜுன் மாதம்



சொந்த மண்ணில் நடைபெறவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியுடனான டெஸ்ட் தொடருக்கு ஜொப்ரா ஆர்ச்சர் திரும்புவார் என எதிர்பார்க்கின்றோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது சகலதுறை துடுப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்திய தீவுகள் இளையோர் அணியில் விளையாடி, பின்னர் இங்கிலாந்துக்கு சென்று கடந்த மே மாதம் ரி – 20 சர்வதேச கிரிக்கெட் போட்டி மூலமாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இடம்பிடித்த ஜொப்ரா ஆர்ச்சர் இது வரையில் இங்கிலாந்து அணிக்காக 21 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கடந்த வருடம் அயர்லாந்து அணியுடனான போட்டியில் ஒருநாள் சர்வதேச அறிமுகம் பெற்றுக்கொண்ட ஜொப்ரா ஆர்ச்சர் இதுவரையில் 14 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 23 விக்கெட்டுகளையும், ஆஷஸ் தொடரில் டெஸ்ட் அறிமுகம் பெற்று இதுவரை வெறும் 7 போட் டிகளில் 30 விக்கெட்டுகளையும், ஒரு ரி – 20 சர்வதேச போட்டியில் விளையாடி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

# கோபி பிரையன்ட் மரணத்துக்குக் காரணம் ஹெலி இயந்திரக் கோளாறு காரணமல்ல



அமெரிக்க கூடைப்பந்து ஜாம்பவான் கோபி பிரையன்ட், அவரது மகள் உள்ளிட்ட 8 பேர் ஹெலிக்கொப்டர் விபத்தில் மரணமடைய காரணம் இயந்திர கோளாறு அல்ல என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் சிக்கிய ஹெலிக் கொப்டர் பாகங்களையும், கண்காணிப்பு கமெராவில் சிக்கியிருந்த காட்சிகளையும் விரிவாக ஆய்வு செய்ததில், அவர்கள் பயணித்த ஹெலிகொப்டரானது இயந்திர கோளாறினால் விபத்தில் சிக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது என அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளது.


கோபி பிரையன்ட் பயணித்த ஹெலிக்கொப்டரானது சம்பவத்தின்போது மேகமூட்டத்தில் புகுந்ததாகவும், அதன் அடுத்த சில நொடிகளில் தீப்பிழம்பாகத் தரையில் பதித்துள்ளதாகவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனவரி 26 ஆம் திகதி கலிபோர்னியாவின் கலாபாசஸில் ஏற்பட்ட ஹெலிக்கொப்டர் விபத்தில் பிரையன்ட், அவரது 13 வயது மகள் கியானா மற்றும் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குழுவானது பிரையண்டின் மாம்பா விளையாட்டு அக்கடமியில் பெண்கள் கூடைப் பந்து போட்டிக்கு விரைந்து கொண்டிருந்தது.

கியானாவின் அணி பிரையண்டால் பயிற்றுவிக்கப்பட்டு போட்டிகளில் விளையாடிக் கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

# மகளிர் மட்டும்...



## அடர்த்தியான முடி வேண்டுமா?



### செம்பருத்தி பூவில் எண்ணெய்யை தினமும் யூஸ் பண்ணுங்க...



செம்பருத்தி அழகான பூ மட்டும் கிடையாது. இதில் ஏராளமான மருத்துவ குணங்கள் பொதிந்துள்ளன. கூந்தல் சார்ந்த பிரச்சினைகளுக்கு உதவக்கூடிய இந்த செம்பருத்தி பூ, ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. செம்பருத்தி பூவின் இதழ்கள் மற்றும் இலைகள், கூந்தல் சார்ந்த பிரச்சினைகளான பொடுகுத் தொல்லை, ஸ்கால்ப் பிரச்சினை, முடி உதிர்வு மற்றும் மேலும் பலவற்றிற்கு சிறந்த தீர்வை அளிக்கக்கூடியது.

இளம் வயதிலேயே வழுக்கை பிரச்சினையை சந்திப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அவர்களுக்கு செம்பருத்தி பூ நல்ல பலனைத் தரக்கூடும். செம்பருத்தி பூவை பயன்படுத்துவதற்கான காரணங்களை தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஆனால், அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரியவில்லையா?

எளிமையான மற்றும் பயனளிக்கக் கூடிய 5 வழிகளை இப்போது கூறப் போகிறேன். இந்த முறைகளுக்கு செம்பருத்தி இதழ்கள் மற்றும் இலைகளை நீங்கள் பயன்படுத்தி வீட்டிலேயே தயாரித்த முடி பராமரிப்பு பொருள்கள் செய்யலாம்...

செம்பருத்தி எண்ணெய் ஒயில் மசாஜ், கூந்தல் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான ஒன்று. செம்பருத்தி எண்ணெயில், ஆரோக்கியமான கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இந்த எண்ணெயை பயன்படுத்தி வாரத்திற்கு 2 முறை முடிக்கு மசாஜ் செய்ய வேண்டும். இப்போது, வீட்டிலேயே செம்பருத்தி எண்ணெய் எப்படி செய்வதென்று பார்ப்போம்...





* 10 செம்பருத்தி பூக்களையும், 10 செம்பருத்தி செடி இலைகளையும் எடுத்துக் கொள்ளவும். அதனை சிறிது நீர் சேர்த்து மைய அரைத்து கொள்ளவும்.

* ஒரு கடாயை அடுப்பில் வைத்து சூடேற்றி, ஒரு கப் தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் ஒயிலை ஊற்றி சூடானதும், அரைத்து வைத்துள்ள பேஸ்ட்டை சேர்க்கவும்.

* இந்த கலவையை 2 முதல் 3 நிமிடங்களுக்கு நன்கு கிளறவும்.

இப்போது செம்பருத்தி எண்ணெய் தயார்.

இந்த எண்ணெயை பயன்படுத்தி ஸ்கால்ப்களில் மசாஜ் செய்து, 30 நிமிடங்கள் கழித்து ஹெர்பல் ஷாம்பூ பயன்படுத்தி குளித்திடவும்.

மீதமிருக்கும் எண்ணெயை அடுத்த முறைக்கு பயன்படுத்த எடுத்து வைத்துக் கொள்ளலாம்.

#### செம்பருத்தி ஷாம்பூ

செம்பருத்தியில் நுரை உண்டாக்கக் கூடிய காரணிகள் இருப்பதால், ஷாம்பூ தயாரிப்பதில் பயன்படுத்த இது மிகவும் ஏதுவானது.

* செம்பருத்தி பூ மற்றும் செம்பருத்தி இலைகளை 1:3 என்ற விகிதத்தில் எடுத்துக் கொள்ளவும். அதாவது, 5 பூக்களுக்கு 15 இலைகள் என்ற கணக்கில்.

* ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, இதில் செம்பருத்தி பூக்கள் மற்றும் இலைகளை சேர்த்து 5 நிமிடங்களுக்கு நன்கு கொதிக்க விடவும். பின்பு, அந்த கலவையை மைய அரைத்து கொள்ளவும். அரைத்த அந்த கலவையுடன், கடலை மாவு சேர்த்து கலந்து கொள்ளவும். இப்போது, வீட்டிலேயே செய்யப்பட்ட கெமிக் கல் இல்லாத செம்பருத்தி ஷாம்பூ பயன்படுத்தத் தயார். செம்பருத்தி மற்றும் நெல்லிக்காய் ஹேர் மாஸ்க் ஆம்லா என்றழைக்கப் படும் நெல்லிக்காயின் பவுடரானது கூந்தலுக்கு மிகுந்த நன்மை அளிக்கக்கூடியது.

#### செம் பருத்தி மற்றும் நெல்லிக்காய் மாஸ்க் செய்முறை:

* செம்பருத்தி பவுடர் மற்றும் நெல்லிக்காய் பவுடரை சம அளவில் எடுத்துக் கொள்ளவும். செம்பருத்தி பவுடர் அனைத்து அழகு சாதன பொருள்கள் விற்கும் கடைகளிலும் சுலபமாக கிடைக்க கூடியது. 2 பவுடரையும் ஒன்றாக சேர்த்து நீர் விட்டு கெட்டியான பேஸ்ட்டாக கலந்து கொள்ளவும். இந்த கலவையை முடி மற்றும் ஸ்கால்ப்பில் தேய்க்கவும். 30 முதல் 40 நிமிடங்கள் கழித்து, ஷாம்பூ பயன்படுத்தி தலையை கழுவிடவும்.(துயார் செய்ய செம்பருத்தி ஷாம்பூவை கூடப் பயன்படுத்தலாம்)

செம்பருத்தி ஹேர் பேக் முடி பிரச்சனைகளில் மிகவும் பெரியது என்றால் அது வழுக்கை பிரச்சினை தான். இதற்கு சிறந்த தீர்வு என ஆயுர்வேதம் கூறுவது. செம்பருத்தியை தான். 5 செம்பருத்தி பூக்கள் மற்றும் செம்பருத்தி இலைகளை சேர்த்து அரைத்துக் கொள்ளவும். இந்த பேஸ்டை, தலையில் பாதிக்கப்பட்ட பகுதியில் தேய்க்கவும். 2 முதல் 3 மணி நேரத்திற்கு இதனை அப்படியே விட்டுவிடவும். பின்பு, செம்பருத்தி ஷாம்பூ பயன்படுத்தி முடியை கழுவிடவும். வாரத்திற்கு 2 முறை இதனை செய்து வருவதன் மூலம் இழந்த முடி மீண்டும் வளருவதை பார்க்கலாம். செம்பருத்தி மற்றும் தேங்காய் பால் ஆரோக்கியமற்ற மற்றும் வறண்ட கூந்தலின் வெளிப்பாடு தான் முடி வெடிப்பு. செம்பருத்தி மற்றும் தேங்காய் இரண்டுமே இயற்கை கண்டிஷ்னர்களாகும். செம்பருத்தி பூவின் இதழ்களை கசக்கி, தேங்காய் பாலில் சேர்க்கவும். அத்துடன், கற்றாழை ஜெல்லை, தேன் மற்றும் தயிர் சேர்த்து கெட்டியான பேஸ்ட்டாக கலந்து கொள்ளவும். இந்த பேஸ்ட்டை முடியில் தடவி, 25 முதல் 30 நிமிடங்களுக்கு அப்படியே விட்டுவிடவும். பின்னர், மைல்டு ஷாம்பூ பயன்படுத்தி முடியை அலசிடலாம்.

## நகத்தைச் சுற்றியுள்ள கருமையைப் போக்க சில அற்புத வழிகள்!

சிறந்த பராமரிப்பு உள்ள நகங்கள் சுத்தத்தின் எடுத்துக்காட்டாக விளங்கும். ஆனால், எவ்வளவு தான் சுத்தமாக நகங்களை பராமரித்து, மெனிக்யூர் எல்லாம் செய்து அழகாக வைத்துக் கொண்டாலும், நகங்களைசுற்றிஅசிங்கமாககருப்பு நிறம் இருந்தால் அது மொத்த



அழகையும் கெடுத்து விடும்.

நகத்தைசுற்றி இருக்கும்கருப்பு வளையங்கள் தங்கள் மொத்த அழகையும் கெடுக்கிறதே, என்ன செய்வதென்றே தெரியவில்லையே என வருத்தப்பட தேவையில்லை. அதிக பணம் செலவு செய்து பராமரிப்பு செய்ய வேண்டாம். வீட்டில் நாம் அன்றாடம் உபயோகிக்கும் சில பொருள்களே நகங்களை சுற்றியுள்ள கருப்பு வளையங்களை போக்குவதில் சிறந்த பலன்களை தரக்கூடும்.

#### தக்காளி

தக்காளியில் வைற்றமின் சி மற்றும் ஈ நிறைந்துள்ளது. இவை, பொலிவான சருமத்தை பெற உதவக்கூடியவை. தக்காளியை அரைத்து முகத்தில் தடவினால் எப்படி பொலிவான சருமம் கிடைக்



குமோ, அப்படி தான் நகங்களை சுற்றி தக்காளி பேஸ்டை போடும் போதும், பொலிவு கிடைக்கும். உங்கள் சமையல் அறையில் எப்போதும் இருக்கும் தக்காளி ஒன்றே போதும், இந்த பிரச்னையை விரட்டியடிக்க. தக்காளியை அரைத்து தான் போட வேண்டும் என்றில்லை. தக்காளியை இரு துண்டுகளாக நறுக்கிநகங்களைசுற்றிதேய்த்தால் கூட போதும். சிறந்த பலனை பெற, தக்காளி பேஸ்டை இரவு தூங்குவதற்கு முன்பு நகத்தை சுற்றி போட்டு விட்டு, இரவு முழுவதும் விட்டுவிடவும். காலை எழுந்து அதனை கழுவி விடவும். மேலும், தக்காளியை துண்டுகளாக நறுக்கி, அதன் மீது சர்க்கரையை தூவி, நகத்தை சுற்றி தேய்க்கும் போது, இறந்த செல்களை நீங்கி, கருப்பு தோல் உரிந்து, நகத்தை அழகாக்கும்.

#### கற்றாழை ஜெல்

கற்றாழையில் சருமத்திற்கு ஊட்டமளிக்கக் கூடிய பண்புகள் அதிகமாக உள்ளன. முகத்திற்கு கற்றாழை ஜெல்லை தேய்ப்பது போலவே, நகங்களை சுற்றியும் தேய்க்க வேண்டும். கற்றாழையில், அழற்சி எதிர்ப்பு பண்புகளும் உள்ளதால் சிறந்த ஆரோக்கியமான மற்றும் அழகான சருமத்தை அது தரக்கூடும்.

#### மஞ்சள் தூள்

நம் முன்னோர் முதல் தற்போதைய தலைமுறையினர் வரை பயன்படுத்தி வரும் மஞ்சள் தூள், பிரகாசமான மற்றும் பொலிவான சருமத்தை பெற்றிட உதவும். மஞ்சள் தூளில் சிறிது நீர் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து பேஸ்ட் போல கலந்து, நகங்களை சுற்றி போடவும். இந்த கலவையுடன் ஒலிவ் ஒயிலை கலந்து பயன்படுத்துவது மேலும் சிறந்தது. நகம் கடிக்கும் பழக்கும் உள்ளவர்கள் நிச்சயம் இதனை பயன்படுத்த வேண்டும். ஏனென்றால், நகத்தை தொடர்ந்து கடிப்பதால் நகங்கள் சுற்றிலும் இருக்கக்கூடியஎரிச்சல்நீங்கிவிடும்.

#### தயிர்

இதிலுள்ள குளிர்ச்சிப் பண்புகள் சருமத்திற்கு ஊட்டமளிக்கக் கூடியது. தயிரிலுள்ள லாக்டிக் ஆசிட் சருமத்திற்கு மிகவும் நன்மை அளிக்கக்கூடியது. மேலும், சருமத்தில் தங்கியிருக்கும் இறந்த செல்களை நீக்கி, பொலிவை தரக்கூடும். தயிரை கை விரல்களில் கருமையாக இருக்கும் பகுதியில் தடவி, 10 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இன்னும் சிறப்பான பலன் கிடைக்க வேண்டுமானால், தயிருடன் சிறிது எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து பயன்படுத்துங்கள்.

# புற்றுநோய் மருத்துவத்தில் புதிய கண்டுபிடிப்பு வியக்க வைக்கும் மருத்துவ ஆய்வு முடிவுகள்!



ஜேம்ஸ் கல்லாகர்
சுகாதாரம் மற்றும் அறிவியல் செய்தியாளர், பிபிசி

மனித உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பின் ஓர் அங்கமாக இருக்கும் ஒரு புதிய கண்டுபிடிப்பு மூலம் எல்லா வகையான புற்றுநோய்களையும் குணப்படுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மார்பகம், நுரையீரல், புரோஸ்டேட் சுரப்பி மற்றும் உடலின் பிற பாகங்களில் உண்டாகும் புற்றுநோயைக் குணப்படுத்தும் முறை ஒன்றை கார்டிஃப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

இந்த முறை இன்னும் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களில் சோதிக்கப்படவில்லை என்றாலும், இது புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் மிக்கது என்று 'நேச்சர் இம்யூனாலஜி' எனும் மருத்துவ சஞ்சிகையில் வெளியாகியுள்ள இதன் முடிவுகள் கூறுகின்றன.

### புதிய கண்டுபிடிப்பு என்ன?

உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு புற்றுநோயை உண்டாக்கும் அணுக்களைத் தாக்கும்.

மனித உடலுக்கு எதாவது தீங்கு ஏற்பட்டுள்ளதா என்று ஆராய்ந்து, அவ்வாறு ஏதேனும் அச்சுறுத்தல் இருந்தால் அவற்றைத் தாக்கி அழிக்கும் உயிரணுக்கள் டி உயிரணுக்கள் (வீளீக்ஷீயியிவி) எனப்படும்.


அனைத்து வகையான புற்று நோய்களையும் கண்டறிந்து அழிக்கும் ஒரு வகை டிஉயிரணுவைத்தான் இப்போது ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இது சாத்தியம் என்று யாரும் இதுவரை நினைக்கவில்லை. ஒரே வகையான டிஉயிரணு அனைத்து வயதினருக்கும் உண்டாகும் அனைத்து வகையான புற்றுநோயையும் குணமாக்கும் வல்லமை பெற்றுள்ளது, என்று இந்த ஆய்வில் பங்கேற்ற பேராசிரியர் ஆன்ட்ரூ செவல் பிபிசியிடம் கூறினார்.

### இது எவ்வாறு வேலை செய்கிறது?

இந்த வகை டிஉயிரணுக்களின் மேற்பரப்பில் இருக்கும் 'ஏற்பிகள்' (receptors) ஒரு குறிப்பிட்ட வேதியியல் நிலையில் புற்றுநோய் அணுக்க ளை கண்டறியும் திறன் உடையவை.

ரத்தம், தோல்,எலும்பு, மார்பு, சிறுநீரகம், கருப்பை உள்ளிட்ட உடலின் பாகங்களில் உண்டாகும் புற்றுநோய் அணுக்களை கண்டறிந்து இந்த டிஉயிரணுக்கள் தாக்குவது ஆய்வக சோதனைகளில் உறுதியாகியுள்ளது.



எனினும், இவற்றால் சாதாரண உயிரணுக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

மனித உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களின் மேற்பரப்பிலும் இருக்கும் MR1 எனும் மூலக்கூறுடன் டிஉயிரணுக்களின் மேற்பரப்பில் இருக்கும் 'ஏற்பிகள்' உடன் இணையும்போது, MR1 மூலக்கூறு அது இருக்கும் அணுவின் வழக்கத்துக்கு மாறான வளர்சிதை மாற்றம் நிகழ்வதை நோய் எதிர்ப்பு மண்டலத்துக்கு காட்டிக் கொடுக்கிறது.

புற்றுநோய் அணுக்களில் உள்ள MR1 மூலக்கூறை கண்டறியும் டிஉயிரணுக்களை கண்டறிவது இதுவே முதல் முறை, என ஆய்வாளர் கேரி டால்டன் பிபிசியிடம் தெரிவித்தார்.

### புற்றுநோயை குணப்படுத்துவதில் இது ஏன் முக்கியமானது?

டிஉயிரணுக்கள் மூலம் புற்றுநோயை குணப்படுத்தும் வழிமுறைகள் ஏற்கனவே உள்ளன.

CAR-T (Chimeric antigen receptor T cells) மூலம் மரணத்தின் விளிம்பில் உள்ள புற்றுநோயாளிகளை முற்றும் குணப்படுத்தும் முறை மிகவும் பிரபலமானது.

எனினும் இதன் மூலம் அனைத்து வகையான புற்றுநோய்களையும் குணப்படுத்த முடியாது.

புற்றுக் கட்டிகளை உருவாக்கும் புற்றுநோய்களில் மட்டுமே இந்த முறை தடுமாறுகிறது. இரத்தப் புற்றுநோய் போன்ற புற்றுநோய்களிலேயே நல்ல பலனளிக்கிறது.

எனினும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வகை டிஉயிரணுக்கள் மூலம் வழங்கப்படும் சிகிச்சை மூலம் அனைத்து வகையான புற்றுநோய்களையும் குணப்படுத்தும் திறன் உடையது என்கின்றனர் ஆய்வாளர்கள்.



# முகமூடியால் முகத்தை மூடிக் கொள்வதால் வைரஸ் பரவுவதைத் தடுத்துவிட முடியுமா?

வைரஸ் பரவும் போதெல்லாம் மக்கள் முகத்துக்கு சேர்ஜிக்கல் மாஸ்க் அணிந்து மூடிக் கொள்ளும் படங்களைப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. நோய்த் தொற்று பரவாமல் தடுப்பதற்கு அவற்றைப் பயன்படுத்துவது உலகம் முழுக்க பல நாடுகளில் வழக்கமாகிவிட்டது.

சீனாவில் அதிகமான மாசுபாட்டில் இருந்து காத்துக் கொள்வதற்காக பலர் இதை அணிந்து வந்த சூழ்நிலையில், இப்போது கரோனா வைரஸ் பரவும் ஆபத்தில் இருந்து காத்துக்கொள்வதற்காக அதிகமானோர் இதைப் பயன்படுத்துகின்றனர்.

காற்றில் வரும் வைரஸ் பரவுவதைத் தடுக்க இது எந்த அளவுக்கு திறன்மிக்கதாக இருக்கும் என்று வைரஸ் ஆராய்ச்சியாளர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

கைகளில் இருந்து வாய் மூலமாக தொற்றுப் பரவாமல் தடுப்பதில் இந்த முகத்திரைகள் ஓரளவுக்கு திறன்மிக்கவையாக உள்ளன என்பதற்கு சில ஆதாரங்கள் இருக்கின்றன.

சேர்ஜிக்கல் மாஸ்க் எனப்படும் இந்த முகத்திரைகள் அணிவது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மருத்துவமனைகளில் பழக்கத்துக்கு வந்தன. ஆனால் 1919 இல் ஐந்து கோடிப் பேருக்கும் மேல் உயிரிழக்கக்காரணமாக இருந்தஸ்பானிஷ் ஃப்ளூ பரவிய காலம் வரையில் இது பொது மக்கள் பயன்பாட்டுக்கு வரவில்லை.

"காற்றில் கலந்துள்ள வைரஸ் அல்லது பாக்டீரியாவைத் தடுப்பதில் வழக்கமான சேர்ஜிகல் மாஸ்க்குகள் திறன்மிக்க பாதுகாப்பு தருவன கிடையாது" என்று லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டேவிட் கேர்ரிங்டன் பிபிசியிடம் கூறினார். அதனால் தான் "பெரும்பாலான வைரஸ்கள்" தொற்றிக் கொள்கின்றன, ஏனெனில் அந்த முகத்திரைகளில் இழைகள் இடைவெளி உள்ளனவாக இருக்கின்றன, காற்றை வடிகட்டும் வசதி இதில் இல்லை, கண்களுக்குப் பாதுகாப்பு இல்லை" – என்று அவர் தெரிவித்தார்.

ஒருவர் தும்மும்போதோ அல்லது இருமும்போதோ "திடீரென வெளியாகும்" கிருமிகள் நம்மைத் தாக்காமல் காப்பாற்ற அவை உதவியாக இருக்கும். கைகளில் இருந்து வாய் வழியாக கிருமிகள் தொற்றுவதும் ஓரளவுக்கு தவிர்க்கப்படும். மனிதர்கள் ஒரு மணி நேரத்தில் 23 முறை தங்கள் முகத்தைத் தொடுவதாக 2016 இல் நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் நடத்திய ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

நொட்டிங்ஹாம் பல்கலைக்கழக மூலக்கூறுவைரஸ்ஆராய்ச்சித்துறைபேராசிரியர் ஜோனாதன் பால், "மருத்துவமனை போன்ற நன்கு கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் நடத்திய ஆய்வில், ப்ளூ காய்ச்சல் தொற்றைத்வ்தடுப்பதில் முகத்துக்கான மாஸ்க் குகள் நல்ல பலன் தருவனவாகக் கண்டறியப்பட்டது" என்று கூறியுள்ளார். சுவாசத்துக்கான வலைமூடிக் கருவியைப் போன்ற பயனை இது தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவாசத்துக்கான வலைமூடிக் கருவிகள், விசேமான காற்று வடிப்பான் அம்சங்கள் கொண்டவையாக, காற்றில் மிதந்து வரும் நச்சுத்துகள்களை வடிகட்டி தடுக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன.

"இருந்தபோதிலும், பொது இடங்களில் மக்கள் பயன்படுத்தும்போது அது எந்த அளவுக்கு திறன்மிக்கதாக இருக்கும் என்று பார்த்தால், தகவல்கள் ஊக்கம் தருவனவாக இல்லை. அதிக நேரத்துக்கு அவற்றை அணிந்து கொண்டிருப்பது என்பது இயலாத வியமாக உள்ளது" என்று பேராசிரியர் பால் கூறியுள்ளார்.

பெல்பாஸ்ட் குயின்ஸ் பல்கலைக் கழகத்தில், வெல்கம் வுல்ப்சன் பரிசோதனை மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் கன்னோர் பாம்ஃபோர்டு, "சாதாரணமான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது" பெரும்பாலும் மிகத் திறன்மிக்கதாக இருக்கும் என்று கூறுகிறார்.

"தும்மும்போதுவாயைமூடிக்கொள்வது, கைகளைக்கழுவுதல், கழுவாமல்கைகளை வாயில் வைப்பதை தவிர்த்தல் போன்ற பழக்கங்கள் இருந்தால் சுவாசம் மூலம் வைரஸ்கள் பரவும் ஆபத்தைக் குறைக்க முடியும்" என்று அவர் கூறுகிறார்.

ஃப்ளூ போன்ற வைரஸ்கள் பரவாமல் தடுக்க பின்வரும் வழிமுறைகள் சிறந்தவையாக இருக்கும் என என்.எச்.எஸ். கூறுகிறது:–

கைகளை இளம் சூடான நீரில் சோப்பு போட்டு அடிக்கடி கழுவ வேண்டும்.

முடிந்த வரை கண்கள் மற்றும் மூக்கை கைகளால் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஆரோக்கியமான, உடல் தகுதியான வாழ்க்கை முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

இங்கிலாந்து பொது சுகாதாரத் துறையில் தொற்றுநோய்கள் மற்றும் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் பற்றிய ஆராய்ச்சித் துறையின் தலைவராக உள்ள டாக்டர் ஜேக் டன்னிங், "முகத்துக்கு மாஸ்க் போட்டுக் கொள்வது பயன் தரும் என்ற எண்ணம் இருந்தாலும், மருத்துவமனை சூழலுக்கு வெளியில் உள்ள பகுதிகளில் இதைப் பயன்படுத்துவதால் எந்த அளவுக்குப் பயன் கிடைக்கும் என்பதற்கு மிகக் குறைந்த ஆதாரங்களே உள்ளன" என்று கூறுகிறார்.

இவை நல்ல பலனைத் தர வேண்டுமானால், இவற்றைச் சரியாக அணிய வேண்டும், அடிக்கடி மாற்ற வேண்டும், பாது



காப்பாக அதை அப்புறப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிடுகிறார்.

"குறிப்பிட்ட காலத்துக்கும் அதிகமாக மாஸ்க் அணிவதால், தொற்று நோய் பரவும் ஆபத்தைக் குறைக்க வேண்டுமானால், பரிந்துரைக்கப்பட்ட பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என ஆராய்ச்சிகள் காட்டுகின்றன" என்கிறார் அவர்.

மக்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், தனிப்பட்ட முறையில் நல்ல பழக்கங்கள் மற்றும் கைகளை சுத்தமாகவைத்துக்கொள்ளும்பழக்கத்தைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று டாக்டர் டன்னிங் கூறியுள்ளார்.

## வாழ்வில் எல்லாமுமே...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பூமத்திய ரேகையில் இருந்து 20 டிகிரி தொலைவுக்குள் உள்ள பகுதியில்தான் எண்ணெய் பனை வளர்கிறது. மழைக்காடுகள் வளரும் பகுதியாகவும் அது உள்ளது. உலகில் உள்ள மொத்த உயிரினங்களில் 80 சதவீத உயிரினங்கள் இந்த மழைக்காடுகளில்தான் வாழ்கின்றன. எண்ணெய் பனை போன்று எண்ணெய் தரும் வேறு வகை தாவரங்களை வேறு பகுதிகளில் வளர்க்க முடிந்தால், இந்த மழைக்காடுகளின் அழிவை நம்மால் தடுத்துவிட முடியும். அதற்காகத்தான் ரெனால்ட்ஸ் மற்றும் அவருடைய சகாக்கள் பணியாற்றி வருகிறார்கள்.

புகையிலை மற்றும் மக்காச்சோளத்தின் இலைகளில் அதிக எண்ணெய் கிடைக்கும் வகையில் உருவாக்க மரபணு மாற்றம் செய்யும் முயற்சியை கன்பெராவில் உள்ள ஆய்வகத்தில் சி.எஸ்.ஐ.ஆர்.ஓ. விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். இவற்றின் இலைகளை நசுக்கி எண்ணெய் எடுக்கலாம் என்பது அவர்களின் திட்டம். சாதாரணமாக புகையிலையில் ஒரு சதவீத தாவர எண்ணெய் இருக்கும். ஆனால் அதை 35 சதவீதம் வரை உயர்த்த வேண்டும் என ரெனால்ட்ஸ் முயற்சி செய்கிறார். அதாவது சோயா பீன்ஸ் விட அதிக எண்ணெய் பெற முயற்சிக்கிறார்.

இருந்தபோதிலும், இதற்குத் தேவையான ஆராய்ச்சியில் யாராவது முதலீடு செய்ய முன்வந்தால், அதிக எண்ணெய் தரும் புதிய வகை புகையிலையை உருவாக்குவதற்கு 12 மாதங்கள் ஆகும் என்கிறார் ரெனால்ட்ஸ். "இது பெரிய தொழில் வாய்ப்பு உள்ள துறை. பாமாயில் வணிகத்தின் இப்போதைய மதிப்பு 67 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற அளவில் உள்ளது" என்கிறார் ரெனால்ட்ஸ்.

இப்போதைக்கு பாமாயில் சந்தை பாதிக்கப்படாது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதைத் தவிர்ப்பது சாத்தியமற்றது. அதற்கு மாற்று உருவாக்குவதும் சாத்தியமற்றது. நமது உணவு, எரிபொருள் மற்றும் அழகுசாதனப் பொருள் தயாரிப்பு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு மாற்று பயிர் தயாரித்து, உலக சுற்றுச் சூழல் மீதான பாதிப்பைக் குறைப்பதற்கான அறிவியல் ரீதியிலான வாய்ப்புகள் உள்ளன.

# கல்முனை வடக்கு விவகாரத்தில் ஏமாற்றப்பட்டுள்ளனர் தமிழர்கள்

## கோடீஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, பெப். 09

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில், கல்முனை வாழ் தமிழர்கள் அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

எனினும், இதன்போது விசேட தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கருணாவும் இந்தப் பிரதேச செயலகம் தொடர்பான எந்த அடிப்படை அறிவும் அற்றவராகத்தான் இருக்கின்றார்.

ஹரிஷ் இந்த பிரதேச செயலகம் நிலத்தொடர்பற்ற ஒரு பிரதேச செயலகம் என வெளியுலகத்துக்கு காட்டியிருந்தார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகிய நாம் நாடாளுமன்றத்தில் வரைபடத்தின் மூலம் இந்தப் பிரதேச செயலகம் நிலத்தொடர்புடைய ஒரு பிரதேச செயலகம் எனச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதன் பின்னர் அனைத்துச் சிங்கள் அரசியல்வாதிகளும் அதனை ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு நிலத்தொடர்புடைய பிரதேச செயலகத்தை தரமுயர்த்திக் கொடுப்பது நியாயமானது – என்றார். (ஐ)

# பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதிக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை

கொழும்பு, பெப். 09

கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளுடன் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதிக்கு, நோய்த்தொற்று இல்லை என வைத்தியசாலை நிர்வாகம் உறுதி செய்துள்ளது.

பதுளை வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பரிசோதனைகளின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த இந்த யுவதி, சீனாவில் கல்வி கற்றுவந்த நிலையில், நாட்டுக்கு மீண்டும் வருகை தந்திருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கான நோய் அறிகுறிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பரிசோதனைகளுக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் கடந்த 5ஆம் திகதி அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, 22 வயதுடைய அந்த யுவதி விசேட பாதுகாப்பு உடைகள் அணிவிக்கப்பட்டு பல்வேறு கட்ட மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது வைத்தியப் பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனோ வைரஸ் தொற்றுக்கு இலக்காகி இதுவரை 720க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# புதிய அரசியல் கூட்டின் செயலாளர் நாயகம் யார்?

## வாக்கெடுப்புக்கு ரணில் தீர்மானம்!



கொழும்பு, பெப். 09
சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணியில் செயலாளர் நாயகமாக யாரை நியமிப்பது என்ற சர்ச்சைக்குத் தீர்வு காணும் வகையில் நாளை திங்கட்கிழமை கூடும் செயற்குழுவில் இது தொடர்பில் வாக்கெடுப்பை நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் தீர்மானித்துள்ளார்.

புதிய அரசியல் கூட்டணியின் செயலாளராக ரஞ்சித் மத்துமபண்டாரவை நியமிக்க சஜித் முன்னதாகத் தீர்மானித்துள்ள நிலையில் ரவி கருணாநாயக்க அல்லது நவீன் திஸாநாயக்கவை இந்தப் பதவியில் அமர்த்துமாறு ரணில் தரப்பு யோசனை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த விவாகரத்துக்கு தீர்வைக் காணும் வகையில் நாளை திங்கட்கிழமை கூடும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் இது தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்தி இறுதித் தீர்மானத்தை எடுக்க ரணில் முடிவு செய்துள்ளார்.

ஏற்கனவே ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் செயற்குழுவில் இவ்வாறு வாக்கெடுப்பு கோருவது குறித்து சஜித் தரப்பு எம்.பிக்கள் விசனத்தை வெளியிட்டுள்ளனர் என அறியமுடிந்தது. (ஐ)

# சபாநாயகர் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு நான் தயார்

## கரு ஜயசூரிய அறிவிப்பு



கொழும்பு, பெப். 09
சபாநாயகராக பதவியில் இருந்து கொண்டு ஜனநாயகத்தை பாதுகாக்க முன்னெடுத்த போராட்டத்தையிட்டு திருப்தியடைகின்றேன். ஐந்து வருட காலப் பாவனைக்கு புதிதாக வாகனங்கள் ஏதும் கொள்வனவு செய்யவில்லை.

முன்னாள் சபாநாயகர் பாவித்த வாகனத்தையே பாவிக்கின்றேன் எனத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, சபாநாயகர் பதவியில் இருந்து ஓய்வு பெறத் தயாராகவே உள்ளேன் எனவும் தெரிவித்தார்.

மல்வத்து அஸ்கிரிய பீட மாநாயக்க தேரர்களைச் சந்தித்து உரையாடிய பின்னர் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–
கடந்த அரசில் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை ஜனநாயகத்தை முன்னிறுத்தியே செயற்பட்டுள்ளேன்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக முன்னெடுத்த போராட்டங்களையிட்டு திருப்தியடைகின்றேன். நெருக்கடி காலத்தில் மாநாயக்க தேரர்களின் வழிநடத்தல்களுக்கு அமையவே பிரச்சினைகளை வெற்றி கொண்டுள்ளேன்.

சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து அரசின் செலவில் புதிதாக எவ்வித வாகனங்களையும் கொள்வனவு செய்யவில்லை.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் இதர அரச வளங்களையே இன்றும் பயன்படுத்தி வருகின்றேன் – என்றார். (ஐ)

# பஸ் மிதிபலகையில் பயணித்த இளைஞர் சில்லில் சிக்கி பலி

கொழும்பு, பெப். 09
பஸ் ஒன்றில் முன் மிதிப்பலகையில் சென்ற இளைஞர் வழுக்கி விழுந்து சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருணாகலை – புத்தளம் வீதியில் பாதெனிய மாரகஸ்கொல்ல பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தின்போது பஸ்ஸின் முன் மிதிப்பலகையில் பயணித்துள்ள இளைஞன் விழுந்துள்ளமையுடன், பஸ்ஸின் பின்புறத்தில் உள்ள சில்லிலும் மோதுண்டுள்ளார். இதன்போது படுகாயமடைந்த அவர் வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.

ஹல்மில்லேவ பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

# தலைமைத்துவச் சிக்கல் தீராவிட்டால் ஐ.தே.கவுக்குத் தேர்தலில் பின்னடைவு!

## எச்சரிக்கின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, பெப். 09
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பிரச்சினைக்கு பொதுத் தேர்தலுக்கு முன்னர் தீர்வைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், சாதகமான பெறுபேற்றை எதிர்பார்க்க முடியாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –
நான் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியபோதிலிருந்து, பிழையான வழியில் செல்லக்கூடாது என்பதில் தெளிவாக இருந்தேன்.

ஜனநாயக ரீதியாகத்தான் நாம் செயற்பட்டோம். இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை நான் செயற்குழுவின்போது விமர்சித்தேன் என்ற காரணத்தினால்தான் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டேன்.

அதாவது, புதிய தலைமைத்துவமொன்றை ஐக்கிய தேசியக் கட்சியினர் விரும்புகிறார்கள் என்று கூறிய காரணத்திற்காகத்தான் நான் நீக்கப்பட்டேன்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளமை உண்மைதான். எனினும், பெரும்பான்மையான உறுப்பினர்கள் சஜித் பிரேமதாஸவுக்குத்தான் ஆதரவளிக்கிறார்கள்.

எனவே, நாமும் அவருக்கு சார்பாகத்தான் செயற்பட வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தீர்வினைக் காணவேண்டும்.

அப்படியில்லை என்றால், பொதுத் தேர்தலிலும் சிறப்பான பெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடியாது.

நான் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் எந்தக் காரணம் கொண்டும் முரண்பட்டமை கிடையாது.

எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட ரீதியாகப் பிரச்சினைக்கூட இல்லை. இருப்பினும், அவரது செயற்பாடுகள் தவறு என்ற காரணத்தினால்தான் தற்போது எதிர்ப்பினை வெளியிடுகிறேன் – என்றார். (ஐ)

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2020 இல் வெளியிடப்பெற்றது.